என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

பழனியில்
தைப்பூசம்
பிப்ரவரி
7 ஆம் திகதி

January 2012

FREE ISSUE



# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest



பழைய தங்கத்துக்கு
அதிக விலை கொடுக்கும்
நிறுவனம் லட்சுமியே
லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


தாகம் நீங்கிட
சுவை ததும்பும் குளிர்பானங்கள்!
BRAND Niru
UFC Coconut Water
Niru FALUDA
Mambo
Nelli
புதிய அறிமுகம்!!
இன்றே வாங்குங்கள் நிருவின்
இயற்கைச் சுவையுடைய பானங்களை!!
UFC
UFC
UFC
Refresh
Imported & Marketed By
NIRU EUROPE LTD
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP
இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கிறது...
மேலதிக விபரங்களுக்கு
Tel : 020 8640 8228
Email : sales@niru.co.uk

# உள்ளே...



## தெய்வ தரிசனம்

67ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தாம் சென்றுவந்த தெய்வத் திருத்தலங்கள் பற்றிய பல சுவையானத் தகவல்களை வாசகர்களுக்குத் தருவதற்கு பதிப்பாசிரியர் எண்ணியுள்ளார். படித்துப் பயனடையுங்கள்.



# தமிழர் தகவல்
## Tamil Information

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2043
கர - தை
மலர் : 09
இதழ் : 104
ஜனவரி - 2012



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
தொலைபேசி :
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!






வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !

# RUBY'S

CATERING




## Elegant Service

*Whether your event is small or large,*
*our 18 years of experience and reputation in the catering profession*
*guarantee a high quality service.*

***We approach every new project with the same level of enthusiasm and professionalism.***

Unit - 4, Walmgate Road, Perivale, Middlesex, UB6 7LH
Tel: 0044-208 799 7180, mail@RubysCatering.co.uk


லண்டனில் முதல்தர காய்கறி இறக்குமதி
மொத்த விற்பனையாளர்கள்
Vaani Foods
தொலைபேசி இலக்கம் 0208 668 7648
லண்டனில் அதிக
காய்கறி வகைகளை இறக்குமதி
செய்து விற்பனை செய்பவர்கள்
தயாரிப்பாளரிடம் இருந்து
நேரடியாக
வாடிக்கையாளருக்கு
MILD
CURRY POWDER
CURRY POWDER

# நூல் வெளியீட்டுவிழா - அன்பிற்கு நன்றி !





அன்பான உறவுகளுக்கு வணக்கம்,

என்னுடைய முதல் நூல் வெளிவந்துள்ள மகிழ்ச்சியினை உங்களோடு பகிர்ந்துகொள்ளவே இதனை எழுதுகிறேன். கடந்த நான்கு ஆண்டுகளாக நான் எழுதிய கட்டுரைகளில் இருந்து, 23 கட்டுரைகளைத் தேர்வுசெய்து 'சொல்வதெல்லாம்...' என்னும் பொதுதலைப்பின் கீழ் நூலாக ஆக்கி இருக்கிறேன். அந்த நூல் கடந்த திசம்பர் 23 அன்று சென்னையில் வெளியிடப்பட்டது. சிறிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவாக இருந்தபோதும், வந்திருந்த தகுதிவாய்ந்த உறவுகள், தோழர்கள், சான்றோர்களால் மிகச் சிறப்பான விழாவாக நடந்தேறியது. எழும்பூர் இக்சா மையத்திலுள்ள சிறிய அரங்கத்தில் வெளியீட்டு விழாவினை ஏற்பாடு செய்திருந்தோம். மதிப்பிற்குரிய பேராசிரியர் சுப. வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், திராவிடர் கழகப் பிரச்சார செயலாளரும், வழக்கறிஞருமான அருள்மொழி நூலினை வெளியிட, தமிழர் தகவல் ஆசிரியர் சிவானந்தசோதி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். எனக்கான நல்ல வாய்ப்பாக, அச்சமயத்தில் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த, சோதி அய்யாவும், அவருடைய துணைவியார் பத்மினி அம்மாவும் வந்திருந்து என்னைச் சிறப்பித்ததை, என் மீது அவர்கள் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாகக் கருதி மகிழ்ந்தேன்.

என் துணைவர் ராஜா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மூத்த பத்திரிகையாளரும், சிறந்த மார்க்சியச் சிந்தனையாளருமான இரா. ஜவஹர், தி.மு.க. மாநிலத் தொண்டரணிச் செயலாளர் மா. உமாபதி, பட்டுக்கோட்டையாரின் அடிச்சுவட்டில் வந்த பொதுவுடைமைக் கவிஞர் ஜீவபாரதி ஆகியோர் நூலைப்பற்றி கருத்துரை யாற்றினார்கள். வழக்.அருள்மொழி, 'எங்கள் வரிசையில் இதோ ஒரு புதிய வரவு உமா' என்று சொன்னதும், அதை எனக்கான அங்கீகாரமாக பேரா.சுபவீ குறிப்பிட்டதும், எனக்குள் புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. அதோடு கூடுதல் பொறுப்புணர்வையும் எனக்கு ஏற்படுத்தி யிருக்கிறது. தோழர் இராமசாமி ஒவ்வொரைப் பற்றியும் அழகான முன்னுரையோடு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கி நிகழ்ச்சியை கலகலப்பாகக் கொண்டு சென்றார். வந்திருந்த அனைவரையும் இன்முகத்தோடும், உற்சாகத்தோடும் வரவேற்று அழைத்துவந்து இருக்கையில் அமர்த்தி, நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஓடியாடி வேலை செய்தாள் என் மகள் இலக்கியா.

இறுதியாக ஏற்புரையுடன் நன்றியையும் இணைத்துக்கொண்டு பேசினேன். உண்மையில் இதுதான் என்னுடைய முதல் மேடைப்பேச்சும் கூட. விழாவிற்கு வந்திருந்த அனைவரும் அளித்த ஊக்கமும், பாராட்டும், வாழ்த்தும் மேலும் மேலும் எழுதுவதற்கு என்னைத் தூண்டிக்கொண்டே இருக்கும்.

# Selvaraja Gold House & Textiles

## தங்கத்தின் விலை அதிகரித்து விட்டதா கவலை வேண்டாம்



- செல்வராஜா கோல்ட் ஹவுஸ் & டெக்ஸ்டைல்சின் 9ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நகைகள் புடவைகள் அனைத்தும் நம்ப முடியாத விலைக்கழிவில்
- 300 பவுண்டுகளுக்குமேல் புடவைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு நகைகள் அனைத்தும் 15 பவுண்டுகள் மட்டுமே கூலியாக அறவிடப்படுகிறது.
- உங்களிடம் இருக்கும் பழைய தங்கத்திற்கு அதிகூடிய பெறுமதியில் உடன் பணம் வழங்கப்படுகிறது
- புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சீட்டுத்திட்டத்தில் இணைந்து நீங்களும் அதிர்ஷ்டசாலியாகுங்கள்.

**162 B Mitcham Raod, London SW17 9NJ**
**Tel : 208 767 3795 Mobile : 078 25005269**




Eastham பகுதியில் No. 1 மளிகை கடை

# SEELANS SUPERSTORES

**332A-336 High Street North**
**Manor Park, London E12 6PH**
**T: 0208 471 5733**


Ayngaran
International
30 High Street, Collierswood
London SW 19 2AB UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 540 1500
Fax : 00 44 (0) 208 543 8400
Email : shop@ayngaran.com
Unit 19, Riverside Business Park
Lyon Road, Wimbledn
London SW19 2RL UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 543 4477
Fax : 00 44 (0) 208 543 4466
Email : sales@ayngaran.com
367 High Street North
East Ham London E12 6PG
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 471 3111
00 44 (0) 208 471 3133
Ayngaran நான்காவது கிளை
11-13 Ealing Road Wembley Middlesex HAO 4AA



# தெய்வ தரிசனம் 6

## தல தரிசனம் தலைமுறைக் காப்பு!

திருவிழாக்களைப் பார்ப்பதற்கு முன், வள்ளி குகையைப் பார்த்துவிடுவோம். கோயிலின் வடக்குப் பிரகாரத்திற்கு அருகில் வள்ளி குகை இருக்கிறது. வாருங்கள்... கவனமாக உள்ளே செல்லுங்கள். இங்கே அமர்ந்து தியானம் செய்வோரும் உண்டு. வள்ளியை, கிழவன் வேடமிட்டு முருகன் துரத்திவந்தபோது, இங்கு வந்து வள்ளி மறைந்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது.

சரி.. இப்படி அமர்ந்து பேசுவோம். திருச்செந்தூர் முருகன் கோயிலில் நான்கு திருவிழாக்கள் சிறப்பானவை. கந்த சஷ்டி திருவிழா, வைகாசி விசாகம், மாசித் தேர், ஆவணி அவிட்டம் - இந்த நான்கு விழாக்களும் திருச்செந்தூரின் சிறப்புமிக்க திருவிழாக்கள். இவ்விழாக்களின் போது, பக்தர்கள் கூட்டம் திரண்டு வருவது, அலை கடல் பொங்கி வருவது போலிருக்கும். கோயிலுனுள்ளும், கடற்கரை எங்கும் மக்கள் தலைகளே காணப்படும்.

கந்த சஷ்டி - அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெறும் கந்த சஷ்டி திருவிழா இப்படை வீட்டிற்கே உரிய சிறப்புத் திருவிழாவாகும். சூரபத்மனை முருகப்பெருமான் வதம் செய்த இடம் இப்படைவீடு என்பதை முதலிலேயே சொல்லியிருக்கிறேன். அதற்கான விழாதான் இது. 7 நாள்கள் நடைபெறும் இவ்விழாவின் 6ஆவது நாள் சூரனை முருகன் வதம் செய்யும் காட்சி அப்படியே தத்ரூபமாக நடத்திக் காட்டப்படும். அதற்கடுத்த நாள், அதாவது 7வது நாள், திருக்கல்யாணம். முருகன் தெய்வானை திருமணம் நடத்தப்படும்.

இங்கே ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்றொரு பழமொழி வழங்கப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். இந்தப் பழமொழியை நான் வேறொரு கோணத்திலும் பார்க்கிறேன். அதாவது குழந்தை பாக்கியம் கிட்டாதவர்கள், சஷ்டியில் விரதம் இருந்தால், அகப்பையில் அதாவது கருப்பையில் குழந்தை வரும் என்ற பொருளில்,

சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்று சொல்வதும் பொருத்தமாகத்தானே படுகிறது!

வைகாசி விசாகம் - இத்திருவிழா மே மற்றும் ஜூன் மாதங்களில் நடைபெறும். வள்ளி, தெய்வானையோடு ஜெயந்திநாதர் உலா வரும் இத்திருவிழா இரவில் நடைபெறும் என்பது சிறப்புச் செய்தி.

மாசித் தேர் - பிப்ரவரி, மார்ச் மாதங்களில் இத்திருவிழா நடைபெறும். 12 நாள்கள் நடைபெறும்.

ஆவணி அவிட்டம் - ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 10 நாள்கள் இவ்விழா நடைபெறும். இதில் 10ஆம் நாள் தேரோட்டம் சிறப்பானது.

ஒரு முறையேனும் இந்தத் திருவிழாக்களில் பங்கெடுக்க வேண்டியது அவசியம் என்பது என்னுடைய கருத்து.

இசுலாமிய சகோதரர்களுக்கு மெக்காவிற்குப் போவது வாழ்நாள் கடமை. அதேபோல், கட்டாயம் என்றில்லாவிட்டாலும், கிறித்தவ சகோதரர்களுக்கு அவர்களின் புனிதத் தலமான ஜெருசலேம் போவதென்பது வாழ்நாள் பாக்கியம். அப்படி, பாடல் பெற்ற தலங்களுக்கும், அறுபடை வீடுகளுக்கும் செல்வது, அங்கு நடைபெறும் திருவிழாக்களில் பங்கெடுப்பது என்பன சைவர்களின் வாழ்நாள் கடமையாகக் கொள்ளப்பட வேண்டும் என்பது என்னுடைய பேரவா.

என் வாழ்க்கையின் இன்றைய பகுதியை நான் அப்படித்தான் கழித்துக் கொண்டு வருகிறேன். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம், தாய்த்தமிழகத்திற்கு நான் ஓடி வருவதற்கு இங்குள்ள சைவத் தலங்களும் ஒரு முக்கிய காரணம். சிவத் தலங்களை தரிசிப்பதில் என்னை நான் மறக்கிறேன். முழுமையாகக் கரைந்து போகிறேன். அந்த உண்மைக்குப் பரிசாகத்தான், இந்த ஆண்டு திருவண்ணாமலை தீபத்திருவிழாவில் நான் அடைந்து பேற்றைக் கருதுகிறேன் (அதைப்பற்றி சென்ற இதழில் எழுதியிருக்கிறேன்). எனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று வரம் கேட்பதற்காக நான் கோயில்களுக்குச் செல்லவில்லை. இதுவரை எனக்கு அளித்திட்ட நன்மைகளுக்கு நன்றி சொல்வதற்காகவும், எம் மக்களும் மண்ணும் சிதைக்கப்பட்ட வலியைச் சொல்லி ஆறுதல் அடையவுமே நான் முயற்சித்துக் கொண்டு வருகிறேன்.

'தல தரிசனம்' தலைமுறைக் காப்பு என்பது என் கருத்து.

என் மனத்தில் தோன்றியவற்றை இடையிடையே உங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இப்போது பேசாவிட்டால் இனி எப்போது...

சரி... தென் தமிழ்நாட்டின் கடற்கரையோரமாகவே நம்முடைய பயணம் தொடர்கிறது. அடுத்து நாம் ஒரு அழகிய அதே நேரத்தில் பல அதிசய செய்திகள் நிறைந்த ஆன்மீக சுற்றுலாத் தலத்திற்குச் செல்லவிருக்கிறோம்.

கன்னியாகுமரி... எல்லோரும் பார்க்க விரும்பும் சுற்றுலா மையம். 67, 70களில், திருச்செந்தூரில் இருந்து வள்ளியூர் வழியாகக் கன்னியாகுமரிக்குப் போக வேண்டும். இங்கு வெளிநாட்டவர்களின் வருகை மிக அதிகம். காரணம், இது வெறும் ஆன்மீகத்தலமாக மட்டும் இல்லை. வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட சுற்றுலாத் தலமாகவும் இருக்கிறது. எனவேதான் யாத்ரீகர்களும், சுற்றுலாப் பயணிகளும் ஒருசேர வந்து குவிகின்றனர்.





வாருங்கள் விடுதிக்குச் சென்று குளித்துவிட்டு முதலில் குமரி அம்மனைத் தரிசிக்கச் செல்வோம். இதோ நகரின் மையத்தில், கடற்கரையோரமாக, எப்படிப்பட்ட ரம்யமான சூழலில் அம்மன் வீற்றிருக்கிறாள் பாருங்கள்! இக்கோயிலுக்குள், ஆண்கள் சட்டை இல்லாமல்தான் போக வேண்டும் என்பது முறையாக்கப்பட்டுள்ளது. அதேபோல் பெண்கள் உடலை முழுவதும் மூடும்படியான ஆடைகளைத்தான் உடுத்திச் செல்ல வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

70களில் நான் வந்தபோது இங்கே கோயில் மட்டும் தனித்திருப்பது போன்று இருந்தது. இப்போது பாருங்கள் கோயிலைச் சுற்றியும் எத்தனை கட்டிடங்கள் வந்துவிட்டன என்று. எல்லாக் கோயில்களிலும் கிழக்கு வாசல் திறந்திருக்கும். ஆனால் இந்தக் கோயிலில் கிழக்கு வாசல் மூடப்பட்டிருக்கிறது பார்த்தீர்களா? அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதைக் கதை என்றும் சொல்பவர்கள் உண்டு. அம்மன் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறாள் இல்லையா? அவளுடைய மூக்கில் வெள்ளைக்கல் மூக்குத்து பளீரிடுகிறது அல்லவா! சிறிது காலத்திற்கு முன், இரவு நேரத்தில், இந்தக் கடல் பகுதியில் போய்க் கொண்டிருந்த கப்பல் ஒன்று கலங்கரை விளக்கின் ஒளி தெரிகிறது என்று எண்ணி, கோயில் இருக்கின்ற திசையை நோக்கி வந்திருக்கிறது. இங்கே கடலின் ஆழம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் கப்பல் கரைதட்டி நின்றுவிட்டது. பிறகுதான் மாலுமிகளுக்கு உண்மை தெரிந்திருக்கின்றது. அந்த ஒளி கலங்கரை விளக்கத்திலிருந்து வந்ததில்லை, அம்மனின் மூக்குத்தியிலிருந்து வெளிப்பட்ட ஒளிதான் அது என்று. இதேபோன்று வேறு கப்பல்களும் திசைமாறக் கூடும் என்பதால், கிழக்கு வாசல் மூடப்பட்டுவிட்டதாம்.

சரி தரிசனம் முடிந்ததா! வாருங்கள் அப்படியே கடற்கரைக்குச் செல்வோம். இந்தக் கடலுக்கு ஒரு சிறப்பு உண்டு. இந்தியப்பெருங்கடல், அரபிக்கடல், வங்காளவிரிகுடா என மூன்று கடல்களும் சங்கமிக்கும் இடம்தான் இந்தக் குமரிமுனை (Cape Comorin). மூன்று வேறுபட்ட தன்மைகளுள்ள கடல்கள் ஒன்றுசேருவதால், மூன்று விதமான மணல்கள் இந்தக் கடற்கரையில் காணப்படும். அனைத்தையும் விற்று காசாக்கிப் பார்க்கும் வியாபார சாணக்கியர்கள், இந்த மணலையும் விட்டுவைக்கவில்லை. எப்படி என்று கேட்கிறீர்களா? பிளாஸ்டிக் கவரில் அழகாக பேக்செய்து, 'அதிசய மண்' என்று சொல்லி விற்கிறார்கள்.

இங்கே சங்கினால் செய்யப்படும் பொருள்கள் தான் அதிகம் விற்பனை செய்யப்படுகின்றன. சங்கு மாலைகள், வீட்டு அலங்காரப் பொருள்கள், பெண்கள் அணியும் ஆபரணங்கள் ஆகியவற்றைச் செய்வதுதான் இப்பகுதி மக்களின் தொழில். இலக்கியங்களில் படித்திருப்பீர்களே... கடலும் கடல் சார்ந்த நிலமும் என்று. அப்படி இப்பகுதி மக்களின் வாழ்வும் கடலும் கடல்சார்ந்தும் அமைந்து இருக்கின்றது.

சரி சரி. அடுத்து எங்கே போகப்போகிறோம் என்றுதானே கேட்கிறீர்கள். கடலுக்குள்தான்!

-தரிசனம் தொடரும்

# அன்பார்ந்த வாசகர்களே...

## தொடர்ந்து எழுதுவேன்

அன்பு உறவுகளுக்கு,

நான் ஏற்கனவே இது குறித்து உங்களோடு பேசியிருக்கிறேன், எழுதியிருக்கிறேன். கடந்த ஐந்தாண்டுகளாக நான் பேசியும், எழுதியும் வருகின்ற செய்தியைத்தான் இப்போதும் உங்கள் முன் வைக்கின்றேன்.

சிவாலயங்களை அமைப்பதில் தற்பொழுது கையாளப்படும் தவறான வடிவமைப்புகளைப் பற்றி, என்னுடைய வருத்தத்தையும், கண்டனத்தையும் தொடர்ந்து பதிவு செய்துகொண்டு வருவதை நீங்கள் அறியாமல் இருக்க வாய்ப்பில்லை. அதற்கு எந்த விதமான எதிர்வினைகளும் இதுவரை வந்ததில்லை என்பது உண்மை.


காலப்போக்கில் உலகில் மாற்றங்கள் ஏற்படுவது என்பது இயல்பானது. தவிர்க்க முடியாததும் கூட. அதே நேரத்தில் தவறுகளையும் மாற்றங்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாதல்லவா? மனிதர்கள் வசிப்பதற்கான வீடு என்றால், இன்னின்ன பயன்பாட்டிற்கு இன்னின்ன அறைகள் என்று அமைக்கின்ற ஒரு அடிப்படை கட்டமைப்பு இருக்கிறது. கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், அலுவலகங்கள், போக்குவரத்து நிலையங்கள் போன்றவையும் அதுபோலத்தான். இவற்றில் சில நவீனங்களைப் புகுத்த முடியுமே தவிர, அடிப்படைக் கட்டமைப்பை மாற்ற முடியாது.

அதேபோல கோயில்களிலும், எலக்ட்ரானிக் மணிகள், முரசுகள் என்றளவில் புதுமைகளைப் புகுத்துவதில் தவறில்லை. ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கும் விதிகளின் படிதான் கோயில்கள் அமைக்கப்பட வேண்டும். ஆனால் இன்று பல கோயில்களில் இம்மரபுகள் மீறப்பட்டுள்ளன, தொடர்ந்தும் மீறப்பட்டு வருகின்றன.

சிவன் கோயில்களில், கருவறையின் நுழைவாயிலுக்கு இருபுறமும் துவாரபாலகர்கள் இருப்பார்கள். அவர்களைக் கடந்துதான் மூலவரைத் தரிசிக்கச் செல்ல வேண்டும். இன்று புலம்பெயர்ந்த நம் மக்கள் கட்டியுள்ள கோயில்களில் துவாரபாலகர்களைக் காணவில்லை. கருவறைக்கு அருகிலேயே தவறு நடந்திருக்கிறது. இதற்கு அவர்களின் அலட்சியப் போக்கு காரணமா என்று தெரியவில்லை.

அதேபோல் பல தெய்வங்களுக்கும் சன்னதி அமைக்கப்படாத நிலையே காணப்படுகிறது. இந்தத் தவறுகளை எல்லாம் சுட்டிக்காட்டியும் யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பக்தி என்பது வியாபாரமாகி வரும் இன்றைய சூழ்நிலையில் இது குறித்து என்போன்றவர்கள் மிகுந்த கவலை அடைந்திருக்கிறோம் என்பதை பதிவு செய்வது கடமை என்று கருதுகிறேன். தவறுகள் திருத்தப்படும்வரை தொடர்ந்து எழுதுவேன்.

# 2012-ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு பொது பலன்



ஞாயிற்றுக் கிழமை, வளர்பிறையில் மேல்நோக்கு கொண்ட உத்திரட்டாதி நட்சத்திரம், மீன ராசி, அஷ்டமி திதி, வரீயான் நாமயோகம், பத்திரை நாமகரணம், நேத்திரம், ஜீவனம் கூடிய சித்தயோக நன்னாளில் 1.1.2012-ம் ஆண்டு பிறக்கிறது. எண் ஜோதிடப்படி தன்னம்பிக்கை கிரகமான புதனின் ஆதிக்கத்தில் (2+0+1+2=5) இந்தாண்டு பிறப்பதால் மக்களிடையே சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். அதிகம் சம்பாதிக்க வேண்டும், அதை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை மேலோங்கும். ஆயில்யம், கேட்டை, ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பெரிய பதவியில் அமர்வார்கள். பிரபலங்களின் சுயசரிதை நூல்களால் ஆங்காங்கே குழப்பங்கள் உண்டாகும். அறிவியலில் இயற்பியல், விளையாட்டுத்துறையில் நவீன நூல்கள் வெளியாகும். தேர்வு முறை எளிதாகும். செய்முறை தேர்வுக்கும் முக்கியத்துவம் உண்டாகும். செயற்கை கோள்கள் அதிகம் ஏவப்படும். செவ்வாய் மண்டலம் பற்றிய சில உண்மைகள் கண்டறியப்படும். வான்மண்டலத்தில் இருக்கும் கனிம கரிம வளங்களை பயன்படுத்த அமெரிக்கா,சீனா உள்ளிட்ட நாடுகள் ஆயத்தமாகும். குழந்தைகளின் பேச்சுத்திறமை அதிகரிக்கும்.

ஞான கிரகமான கேதுவின் ஆதிக்கத்தில் இந்தாண்டின் விதி எண் (1+1+2+0+1+2=7) வருவதால் ஆன்மீகத்தின் பக்கம் மக்கள் மனம் திரும்பும். கோவிலை விட தியான மையங்களிலும்,சித்தர் பீடங்களிலும் கூட்டம் அலைமோதும். ஆனால் ஆன்மீகத் தலைவர்களின் உடல்நலம் பாதிக்கும். மக்களின் அடிமனதில் சின்ன பயம் வரும். இந்தாண்டின் விதி எண் கேதுவின் ஆதிக்கத்தில் வருவதால் நாகத்தின் பெயருடையவர்கள் புகழடைவார்கள். சின்ன சின்ன பதவிகளை பிடிப்பதற்குக் கூட பெரிய சண்டைகள் வரும். அறிவு ஜீவிகளின் ஆலோசனைகளை மக்கள் புறக்கணிப்பார்கள். கடன் வாங்குபவர்கள் அதிகமாவார்கள். கடன் தொகையை திரும்ப செலுத்த முடியாதவர்களின் எண்ணிக்கை உயரும். உலக நடப்புகளை அறிந்து கொள்ள மக்கள் ஆர்வம் காட்டுவார்கள். பிரபலங்களைப் பற்றிய வதந்திகள் அதிகரிக்கும். பத்திரிக்கைத் துறையினர் பாதிப்படைவார்கள். ஐடி துறையினருக்கு சம்பளம் குறையும். வேலை இழப்பு அதிகரிக்கும். பொறியியல் கல்லூரிகளில் காலி இடங்கள் அதிகரிக்கும். மாணவர்களிடையே கவனச்சிதைவு அதிகரிக்கும்.

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் இந்தாண்டு பிறப்பதால் மழை அதிகமாகும். உணவு உற்பத்தி கூடும். ஆனால் பூச்சித்தொல்லையாலும் விவசாயம் பாதிக்கும். உரம் விலை உயரும். சீனா,ஜப்பான்,திபெத் பாதிப்புக்குள்ளாகும். அதிக மைலேஜ் தரக்கூடிய வாகனங்களின் உற்பத்தி அதிகரிக்கும். நவீன இரு சக்ர வாகனங்கள் சந்தைக்கு வரும். கணினி,செல்போன் உள்ளிட்ட அனைத்து வகை எலக்ட்ரானிக்ஸ் சாதனங்களின் விலைகள் வீழ்ச்சியடையும். 22.6.2012 வரை செவ்வாய் சிம்ம ராசியிலேயே நிற்பதால் சிம்ம ராசிக்காரர்களின் உடல்நிலை பாதிக்கும். ரியல் எஸ்டேட் தொழில் நலிவடையும். ஆனால் அக்டோபர் மாதத்திலிருந்து சூடுபிடிக்கும். காதலர்களுக்கு எதிர்ப்புகள் அதிகரிக்கும். சாலைகள் நவீனமயமாகும். நகர வாழ்க்கையின் மோகம் குறைந்து புறநகரத்தை ஒட்டியிருக்கும் பகுதிகளுக்கு மக்கள் இடம் பெயர்வார்கள். எதிரும் புதிருமாக இருந்தவர்கள் ஒன்று சேர்ந்து புதிய கூட்டணி உருவாகும். எதிர்கட்சிகள் வலுவடையும்.

16.5.2012 வரை குரு பகவான் மேஷத்தில் நிற்பதால் கால்நடைகள் பாதிக்கும். 17.5.2012 முதல் குரு பகவான் ரிஷபத்தில் அமர்வதால் இந்தியாவில் மகான்கள் அவதரிப்பார்கள். காவல் துறை நவீனமயமாகும். சாதாரண அடித்தட்டு மக்களின் குரலுக்கு நீதி மன்றம் செவி சாய்க்கும். குற்றவாதிகளுக்கு எதிரான தீர்ப்புகள் கடுமையாகும். சமையல் எரிவாயுவின் விலை உயரும். தங்கம், வெள்ளி விலை தொடர்ந்து உயரும்.

காலப்புருஷனின் பனிரெண்டாவது ராசியான மீனத்தில் இந்தாண்டு பிறப்பதால் மக்களிடையே சேமிப்புகள் கரையும். எங்கும் எதிலும் பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். எல்லா சுகங்களையும் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். சுற்றுலா துறை சூடு பிடிக்கும். வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கும். வெளிநாட்டு பயணிகளின் வருகையும் அதிகரிக்கும். கடல்வாழ் உயிரினங்களை காப்பாற்ற சர்வதேச அளவில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உலகெங்கும் பனிமலைகள் உருகி கடலின் நீர் மட்டம் உயரும். கடல் உணவு வகைகளை மக்கள் விரும்பி உண்ணுவார்கள். பால் உற்பத்தி அதிகரிக்கும். விளையாட்டுத்துறையில் இந்தியா சாதிக்கும்.

இந்தப் புத்தாண்டு மக்களிடையே விழிப்புணர்வையும்,போட்டி மனப்பான்மையையும் அதிகப்படுத்துவதாக இருக்கும்.

பரிகாரம்:

சுயமரியாதை கிரகமான புதன் மற்றும் ஞான கிரகமான கேதுவின் ஆதிக்கத்திலும் இந்தாண்டு பிறப்பதால் கிடைக்காததை நினைத்து ஏங்கித் தவிக்காமல் இருப்பதை வைத்துக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்து காட்டுங்கள்.

# 2012-ம் ஆங்கில புத்தாண்டு பலன்கள்



## மேஷம்

நிறை குறைகளை அலசி ஆராய்ந்து யாரையும் துல்லியமாக கணிக்கும் நீங்கள் மற்றவர்களின் உணர்வுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள்.

உங்கள் ராசிக்கு 10-ம் வீட்டில் சுக்ரன் அமர்ந்திருக்கையில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் கனிவாக பேசி பலனில்லை, இனி கறாராக பேச வேண்டுமென்ற முடிவுக்கு வருவீர்கள். ஏதாவது வேலையாக வேண்டுமென்றால் காலை பிடிப்பதும்,கையைப்பிடிப்பதுமாக உள்ளவர்களிடமிருந்து விடுபடுவீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். உங்களுக்கு பனிரெண்டாவது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். கல்யாணம்,கிரக பிரவேசம் என வீடு களை கட்டும். பழைய உறவினர்கள்,நண்பர்கள் தேடி வருவார்கள். விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்கள் சேரும்.

16.5.2012 வரை உங்கள் ராசிக்குள்ளேயே குரு அமர்ந்து ஜென்மகுருவாக நீடிப்பதால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். சில நேரங்களில் நிம்மதி இழந்து தவிப்பீர்கள். உங்களைப் பற்றி எல்லோரும் தவறாக நினைப்பதாக நீங்களே முடிவெடுக்காதீர்கள். தாழ்வுமனப்பான்மை தலை தூக்கும் போதெல்லாம் அதை தட்டி வைக்கப்பாருங்கள். பிள்ளைகளால் அலைச்சல் இருக்கும். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசியை விட்டு விலகி 2-ல் அமர்வதால் கோபம் குறையும். கடுமையாக பேசுவதை நிறுத்திவிட்டு இங்கிதமாகவும்,இதமாகவும் பேசி சில காரியங்களை சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தையும் தந்து முடிப்பீர்கள். தலைச்சுற்றல்,வாந்தி, அடிவயிற்றில் வலி யாவும் விலகும். பார்வைக்கோளாறு சரியாகும். பிள்ளைகளின் பிடிவாதம் குறையும். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேர்வீர்கள்.

உங்கள் ராசிநாதனான செவ்வாய் வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை 5-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் கர்ப்பிணிப் பெண்கள் கவனமாக இருப்பது நல்லது. குழந்தையின் வளர்ச்சியை அவ்வப்போது பரிசோதித்துக் கொள்வது நல்லது. சகோதரர்களால் அலைச்சலும், செலவுகளும் இருக்கும். வரம்பு மீறி யாரையும் விமர்சிக்க வேண்டாம். பூர்வீகச் சொத்துப் பிரச்சனையை முடிந்த வரை பேசித்தீர்க்கப்பாருங்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். அவர்களின் விருப்பப்படி உயர்கல்வியை தொடர அனுமதியுங்கள். சொத்து விற்பது வாங்குவதில் முன்னெச்சரிக்கையாக செயல்படுங்கள். 23.6.2012-க்கு பின்னர் செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் சிக்கல்கள் யாவும் தீரும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள்.

வருடம் பிறக்கும் போது 2-ம் வீட்டில் கேதுவும், 8-ம் வீட்டில் ராகுவும் அமர்ந்திருப்பதால் கணவன் மனைவிக்குள் பனிப்போர் இருக்கும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து போவது நல்லது. உறவினர்கள் சிலர் உங்களுக்குள் வீண் வம்புசண்டையை ஏற்படுத்தக்கூடும். 1.12.2012 முதல் உங்கள் ராசிக்குள் கேதுவும்,7-ல் ராகுவும் நுழைவதால் லாகிரி வஸ்துகளை தவிர்ப்பது நல்லது.

சனிபகவான் ராசிக்கு 7-ம் வீட்டில் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் திடீர் நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வர வேண்டாம். யாருக்கும் ஜாமீன்,கெரண்டர் கையெழுத்திட வேண்டாம். அலைப்பேசியில் பேசிக்கொண்டே வாகனத்தை இயக்காதீர்கள். மனைவி வழி உறவினர்களுடன் கருத்துமோதல்கள் வரக்கூடும். மகனுக்கோ,மகளுக்கோ வாழ்க்கைத்துணை தேடுபவர்கள் நிச்சயதார்த்தத்திற்கும்,திருமணத்திற்கும் அதிகம் இடைவெளி தராமல் உடனே முடிப்பது நல்லது. சொத்து வரி, வருமான வரி எதுவாக இருந்தாலும் தாமதிக்காமல் செலுத்திவிடுங்கள். சட்டத்திற்கு புறம்பான வகையில் செல்ல வேண்டாம். சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டில் அமர்வதால் இக்காலக்கட்டத்தில் திடீர் யோகம் உண்டாகும்.

வியாபாரத்தில் புதிதாக தொழில் தொடங்கும் ஆசையில் மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் எதுவும் செய்ய வேண்டாம். பாக்கிகளை கொஞ்சம் சிரமப்பட்டு வசூலிக்க வேண்டி வரும். வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். ஜீன் மாதத்திலிருந்து வியாபாரம் சூடு பிடிக்கும். உணவு,கமிஷன்,மரவகைகளால் ஆதாயமடைவீர்கள். கூட்டுத் தொழில் வேண்டாம்.

உத்யோகஸ்தர்களே! மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். அதிகாரிகளிடம் அதிக உரிமையுடன் பேசவேண்டாம். வருட பிற்பகுதியில் சம்பள உயர்வு,பதவியுயர்வை எதிர்பார்க்கலாம். வெளிநாட்டு நிறுவனங்களில் சிலருக்கு புது வேலை அமையும். சக ஊழியர்களுடன் இருந்த பனிப்போர் நீங்கும்.

கன்னிப்பெண்களே! நொறுக்குத் தீனிகளை குறையுங்கள். ஜீன் மாதத்திலிருந்து மாதவிடாய்க் கோளாறு சரியாகும். திருமணம் முடியும். சிலர் தடைப்பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள். உங்கள் கல்வித் தகுதிக்கேற்ற வேலைக் கிடைக்கும். வருடத்தின் முற்பகுதியில் காதலில் சிக்கிக் கொள்ள வேண்டாம். மாணவர்களே! விளையாட்டை குறைத்து படிப்பில் கவனம் செலுத்துங்கள். டி.வி பார்ப்பதை குறையுங்கள். வகுப்பறையில் ஆசிரியிரிடம் தயங்காமல் சந்தேகங்களை கேளுங்கள். கலைத்துறையினர்களே! வேற்றுமொழிவாய்ப்புகளால் புகழடைவீர்கள்.

இந்தப் புத்தாண்டு மே மாதம் வரை உங்களை சோதித்தாலும், ஜீன் மாதத்திலிருந்து சவால்களில் வெற்றி பெற வைப்பதுடன் வருமானத்தையும் வாரி வழங்கும்.



# ரிஷபம்

பொன், பொருள் கொடுத்துப் பொய் சொல்லச் சொன்னாலும் புறங்கூறாத நீங்கள் நீதிக்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட்டவர்கள்.

உங்கள் ராசிநாதன் சுக்ரன் 9-ம் வீட்டில் வலுவாக நிற்கும் நேரத்தில் இந்த புத்தாண்டு பிறப்பதால் எதிலும் உங்கள் கை ஓங்கும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். குழந்தை பாக்யம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். தடைப்பட்ட கல்யாணம் முடியும். நவீன ரக வாகனம் வாங்குவீர்கள். எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்காமல் பாதியிலேயே வீடு கட்டும் பணி நின்று விட்டதே! இனி பல வழிகளிலும் உதவிகள் கிடைக்கும். இந்த ஆண்டு முழுக்க பிள்ளைகளுக்கு அருமையாக இருக்கும். புதன் 8-ல் மறைந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பிரபலமாவீர்கள். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

16.5.2012 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 12-ம் வீட்டில் நிற்பதால் அநாவசிய செலவுகள் அதிகமாகிக் கொண்டே போகும். ஆக்கப்பூர்வமான பணிகளுக்காக வெளியிலும் கொஞ்சம் கடன் வாங்க வேண்டியிருக்கும். ஆன்மீகத்தில் மனம் லயிக்கும். வெளிமாநில புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பூர்வீக சொத்தில் பாகப்பிரிவினை நல்லவிதத்தில் முடியும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அமையும். 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் வரும் முடிய உங்கள் ராசிக்குள்ளேயே ஜென்மகுரு அமர்வதால் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். யாரையும் நம்பி பெரிய முடிவுகள் எடுக்காதீர்கள். அடிக்கடி கோபப்படாதீர்கள். உணவில் உப்பு, காரத்தை குறைத்துக் கொள்ளுங்கள். லாகிரி வஸ்துகளை பயன்படுத்துபவர்கள் இனி அவற்றை அறவே தவிர்க்க வேண்டும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து போவது நல்லது. ரத்த அழுத்தம் அதிகரிக்கக்கூடும். பிள்ளைகள் சில நேரங்களில் உங்களை புரிந்து கொள்ளாமல் பேசுவார்கள்.

உணர்ச்சிவசப்படாமல் எந்த முடிவும் எடுப்பது நல்லது. தேனொழுக பேசுகிறார்கள் என்று யாரையும் நம்பி விட வேண்டாம். குடும்பத்தில் சுபச் செலவுகள் இருந்துக் கொண்டேயிருக்கும். விருந்தினர், உறவினர் வருகை அதிகரிக்கும். செரிமானக் கோளாறு, தலைச் சுற்றல் வரக்கூடும். விலை உயர்ந்த ஆபரணங்களை இரவல் தர வேண்டாம். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

செவ்வாய் வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை 4-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் புதிய முயற்சிகளில் வெற்றியுண்டு. தாழ்வுமனப்பான்மை நீங்கும். நெருக்கமானவர்களுடன் மோதல், தாயாருக்கு மருத்துவச் செலவுகள், சொத்து தகராறுகள் வந்து செல்லும். 23.6.2012-க்கு பின்னர் செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் எதிர்பார்த்திருந்த வகையில் உதவியுண்டு. மூத்த சகோதரர் உறுதுணையாக இருப்பார். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

வருடத்தின் தொடக்கத்திலிருந்தே ராசிக்குள் கேதுவும், 7-ம் வீட்டில் ராகுவும் அமர்ந்திருப்பதால் குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் முற்றும். சேமிப்புகள் கரையும். சிலரால் நீங்கள் ஏமாற்றப்படக் கூடும். எனவே பண விஷயத்தில் கறாராக இருங்கள். மனைவிக்கு மாதவிடாய்க் கோளாறு, கர்ப்பப்பை சிதைவு வரக்கூடும். ஆனால் 1.12.2012 முதல் கேது 12-ம் வீட்டிலும், ராகு 6-ம் வீட்டிலும் அமர்ந்திருப்பதால் ஆன்மீகத்தில் மனம் லயிக்கும். கல்யாணம்,காதுகுத்து,சீமந்தம் என சுபச்செலவுகள் அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். அவர்களால் உதவியும் உண்டு. அரசு சம்பந்தப்பட்ட காரியங்கள் முழுமையடையும்.

சனிபகவான் உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டிலேயே பலம்பெற்று அமர்ந்திருப்பதால் எத்தனைப் பிரச்சனைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் சமாளிக்கக் கூடிய மனோபலம் உங்களுக்கு கிடைக்கும். பழுதான வாகனம் ஓடும். நாடாளுபவர்கள்,வேற்று மொழிக்காரர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். ஷேர் மூலம் பணம் வரும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வீடு வந்து சேரும். பயணங்களால் ஆதாயம் உண்டு. வழக்குகளில் வெற்றி கிடைக்கும். அந்த வெற்றி மூலம் சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் அமர்வதால் இக்காலக்கட்டத்தில் பிள்ளைகளால் கொஞ்சம் அலைச்சல் இருக்கும்.


வியாபாரத்தில் சந்தை நிலவரம் அறிந்து லாபத்தை பெருக்குவீர்கள். கொடுக்கல்-வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும். புதிய முதலீடுகளை போடுவதுடன் கடையை விரிவுபடுத்தி போட்டியாளர்களை திகைக்கச் செய்வீர்கள். வேலையாட்கள் முழு ஒத்துழைப்பு தருவார்கள்.புது வேலையாட்களையும் பணியில் அமர்த்துவீர்கள். ஷேர்,எண்டர்பிரைஸ்,மரவகைகளால் ஆதாயமடைவீர்கள்.

உத்யோகத்தில் உங்களைப் பற்றி குறை கூறியவர்களுக்கு இனி பதிலடி கொடுப்பீர்கள். உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார். பதவி உயர்வு,சம்பள உயர்வு எல்லாம் உண்டு. சக ஊழியர்கள் ஒத்துழைப்பு தருவார்கள்.

கன்னிப் பெண்கள் பெற்றோரின் பாசமழையில் நனைவார்கள். ஆடை அணிகலன்கள் சேரும். தடைபட்ட கல்வியை தொடர்வார்கள். காதல் கைகூடும். கனவுத்தொல்லை,தூக்கமின்மை வந்துபோகும். மாணவர்களின் எண்ணங்கள் நிறைவேறும். எதிர்பார்த்தபடி நல்ல கோர்ஸில் சேருவார்கள். அயல்நாடு சென்று படிக்கும் வாய்ப்பும் தேடி வரும்.

கலைத்துறையினர்கள் கவுரவிக்கப் படுவார்கள். மூத்த கலைஞர்களின் நட்பை பெறுவார்கள். சம்பள பாக்கி கைக்கு வரும்.

இந்தப் புத்தாண்டு எங்கும் எதிலும் செல்வாக்கையும், அடிப்படை வசதி, வாய்ப்புகளையும் அள்ளித் தருவதாக அமையும்.



# மிதுனம்

விழுவதெல்லாம் எழுவதற்கே என்று நம்பிக்கையுடன் போராடி முதலிடத்தைப் பிடிப்பவர்களே! பிறரை மகிழ்வித்து மகிழ்பவர்களே! மனித நேயம் உள்ளவர்களே!

உங்கள் ராசிநாதனான புதன் உங்கள் ராசியைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் தன்னம்பிக்கை பெருகும். உறவினர், நண்பர் வருகையால் வீடு களைகட்டும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். பிரபலங்கள் ஆதரவாகப் பேசுவார்கள். பூர்வீகச் சொத்து பிரச்னைகளை பேசித் தீர்ப்பீர்கள். வழக்கில் வெற்றி உண்டு. மகளுக்கு நல்ல வரன் அமையும். உறவினர் மெச்சும்படி கோலாகலமாக திருமணத்தை முடிப்பீர்கள். மகனின் கூடாப் பழக்கம் விலகும். அயல்நாட்டில் தரமான பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற உங்கள் பிள்ளைகளுக்கு வாய்ப்பு வரும். தாயாருக்கு இருந்த முதுகு வலி, மூட்டு வலி சரியாகும். தந்தைவழி சொத்துகள் வந்து சேரும். பழைய நகைகளை விற்று புது டிசைனில் ஆபரணங்கள் வாங்குவீர்கள். அடிக்கடி தொல்லை கொடுத்த பழுதாகி செலவு வைத்த வாகனத்தை மாற்றுவீர்கள்.

16.5.2012 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு லாப வீட்டிலே வலுவாக காணப்படுவதால் திடீரயோகம், பணவரவு உண்டு. நீண்ட நாளாக வராமலிருந்த பணமெல்லாம் கைக்கு வரும். பழைய கடனில் ஒருபகுதியை தீர்க்க வழி பிறக்கும். மூத்த சகோதரர் முன்வந்து உதவுவார். உங்களையும் அறியாமல் உங்களிடம் இருந்து வந்த தாழ்வுமனப்பான்மை நீங்கும். இனி நேர்மறை எண்ணங்கள் உருவாகும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதைக் கூடும். பெரிய பதவிகள் தேடி வரும். குழந்தை பாக்யம் கிடைக்கும். தடைபட்ட வீடு கட்டும் பணியை தொடர்வீர்கள். பழைய சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 12-ம் வீட்டில் சென்று மறைவதால் திடீர் பயணங்கள்,செலவுகள் அதிகரிக்கும். ஒரே நேரத்தில் பல வேலைகளையும் பார்க்க வேண்டி வரும். அநாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். முன்பின் அறியாதவர்களை வீட்டில் சேர்க்க வேண்டாம்.

வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை செவ்வாய் 3-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் புதிதாக வீடு, மனை வாங்குவது லாபகரமாக முடியும். சிலர் இருக்கும் வீட்டில் கூடுதலாக ஒரு அறை கட்டுவார்கள். கைமாற்றாக வாங்கியதை தந்து முடிப்பீர்கள். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். மகளின் கல்யாணத்தை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். மகனுக்கு அயல்நாட்டில் வேலை கிடைக்கும். சகோதர,சகோதரிகள் பாசமாக நடந்து கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் எல்லோரும் உங்களை மதிப்பார்கள். எதிர்த்துப் பேசியவர்கள்,வலிய வந்து நட்புபாராட்டுவார்கள். வி.ஐ.பிகள் தக்க நேரத்தில் உங்களுக்கு உதவுவார்கள். சிலநேரங்களில் உங்களையும் அறியாமல் சில தவறுகள் நேர்ந்ததல்லவா! இனி எதிலும் கவனமாக செயல்படுவீர்கள்.

வருடம் பிறக்கும் போது 6-ம் வீட்டில் ராகுவும், 12-ம் வீட்டில் கேதுவும் அமர்ந்திருப்பதால் வெளிநாட்டு பயணம்,வேற்று மதத்தினரால் உதவி எல்லாம் உண்டு. பிரபலங்களுக்கு நண்பராவீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அண்டை மாநில புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். சுபச் செலவுகள் அதிகரிக்கும். 1.12.2012 முதல் உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் ராகுவும், 11-ம் வீட்டில் கேதுவும் நுழைவதால் உங்களின் செயல்களில் தெளிவு பிறக்கும். எதையும் முதல் முயற்சியில் முடித்துவிட வேண்டுமென்பதில் கவனமாக இருப்பீர்கள். பிள்ளைகளால் கொஞ்சம் அலைச்சல் வந்துபோகும். ஆன்மீகவாதிகள்,சித்தர்களின் ஆசி கிட்டும். இளைய சகோதரர் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார். அரசாங்க வேலைகளில் வெற்றியுண்டு.

சனிபகவான் ராசிக்கு 5-ம் வீட்டில் தொடர்வதால் பிள்ளைகள் உங்களைப் புரிந்துக் கொள்ளாமல் பேசுவார்கள். உயர்கல்வி, உத்யோகத்தின் பொருட்டு பிள்ளைகள் உங்களைப் பிரிவார்கள். தாய்மாமன் வகையில் செலவுகள் இருக்கும். சின்னசின்ன மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். குலதெய்வக் கோவிலுக்கு மறக்காமல் சென்று வாருங்கள். சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 4-ம் வீட்டில் அமர்வதால் இக்காலக்கட்டத்தில் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயாருடன் மனத்தாங்கல் வரும்.


வியாபாரத்தில் அமோகமாக லாபம் இருக்கும். புது முதலீடு செய்து வியாபாரத்தை விரிவுப்படுத்த திட்டமிடுவீர்கள். ஏப்ரல் மாதத்திற்குள் பழைய பாக்கிகள் வசூலாகும். புது கிளைகள் தொடங்குவீர்கள். கொடுக்கல்-வாங்கலில் சுமுக நிலை ஏற்படும். அனுபவமிக்க வேலையாட்களை பணியில் அமர்த்துவீர்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். முக்கிய ஆவணங்கள் கையெழுத்திடும் போது சட்ட ஆலோசகரை கலந்தாலோசித்து முடிவெடுப்பது நல்லது. உணவு, ரியல் எஸ்டேட் வகைகளால் ஆதாயம் அதிகரிக்கும்.

உத்யோகத்தில் வீண் அவமானங்கள், வேலைச்சுமை, விருப்பமில்லாத இடமாற்றங்களையெல்லாம் சந்தித்தீர்களே! ஆனால் இந்த வருடத்தின் தொடக்கத்திலேயே உங்கள் கை ஓங்கும். இனி சம்பள உயர்வு, பதவி உயர்வு எதிர்பார்க்கலாம். சிலருக்கு புது வேலை அமையும். உயரதிகாரிகள் மனம் விட்டு பேசுவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்துக் கொள்வார்கள்.

கன்னிப்பெண்களே! சிலருக்கு கல்யாணம் ஏற்பாடாகியும் நின்று போனதே! இனி அந்த நிலை மாறும். வருடத்தின் முற்பகுதியிலேயே உங்கள் ரசனைக்கேற்ற நல்ல வாழ்க்கைத்துணை அமைவார். வேலையும் கிடைக்கும். மாணவர்களே! மந்தம், மறதி விலகும். நினைவாற்றல் பெருகும். படிப்பில் நாட்டம் அதிகரிக்கும். வகுப்பாசிரியர் பாராட்டும் படி நடந்துக் கொள்வீர்கள். விளையாட்டில் பதக்கம் வெல்வீர்கள்.

கலைத்துறையினர்களே! வர வேண்டிய சம்பள பாக்கி கைக்கு வரும். புகழடைவீர்கள்.

இந்த 2012ம் ஆண்டின் பிற்பகுதி கொஞ்சம் அலைச்சலையும், மையப்பகுதி ஓரளவு வளர்ச்சியையும், முற்பகுதி அதிரடி வளர்ச்சியையும் தருவதாக அமையும்.



# கடகம்

ஆறாவது அறிவுக்கு அடிக்கடி வேலைத் தரும் நீங்கள், சத்தியத்திற்கும், தர்மத்திற்கும் கட்டுப்பட்டவர்கள்.

உங்கள் 9-வது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் பணவரவு உயரும். எதிர்ப்புகள் அகலும். கடன் பிரச்னையிலிருந்து விடுபடுவதற்காக ஓயாமல் உழைப்பீர்கள். சுக்ரன் உங்கள் ராசியைப் பார்த்துக் கொண்டிருப்பதால் அழகு, இளமைக் கூடும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வாகனத்தை மாற்றுவீர்கள். பூர்வீக சொத்தை சீர் செய்வீர்கள். உங்கள் ரசனைக் கேற்ப வீடு அமையும். உறவினர் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும்.

16.5.2012 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 10-வது வீட்டில் தொடர்வதால் அதுவரை வேலைச்சுமை அதிகமாக இருக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். சில காரியங்களை போராடி முடிக்க வேண்டி வரும். பிரபலங்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். நெருக்கமானவர்களிடம் கூட குடும்ப அந்தரங்க விஷயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். அதிக அறிமுகம் இல்லாதவர்களை வீட்டிற்கு அழைத்து வர வேண்டாம். பழைய கடன் பிரச்சனைகள் அவ்வப்போது மனசை வாட்டும். ஊர் பொது விவகாரங்களில் உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்வீர்கள். உத்யோகத்திலும் மறைமுக எதிர்ப்புகளும், இடமாற்றங்களும் வரக்கூடும். எனவே அலுவலகத்தில் அதிக பேச்சை தவிர்ப்பது நல்லது. வங்கிக் காசோலையில் முன்பே கையெழுத்திட வேண்டாம். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 11-ம் வீடான லாப வீட்டில் அமர்வதால் எதிர்பாராத திடீர் பணவரவு உண்டு. ஏதோ ஒன்றை இழந்ததைப் போல இருந்தீர்களே! அந்த நிலை மாறி உற்சாகம் அடைவீர்கள். தீவிரமாக வேலைத் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வேலைக் கிடைக்கும். தற்காலப் பணியில் இருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுவீர்கள். மூத்த சகோதரர் பகையை மறந்து வலிய வந்து பேசுவார். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். சித்தர்கள், மகான்களின் ஆசி கிட்டும். இந்த வருடத்தில் வாரிசு உருவாகும். மகனின் திருமணத்தை விமர்சையாக நடத்துவீர்கள். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். வங்கிக் கடனில் ஒரு பகுதியை தீர்ப்பீர்கள். புது வீட்டில் குடி புகுவீர்கள்.

செவ்வாய் வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை 2-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் செலவினங்கள் கூடும். சில நேரங்களில் காரசாரமாகப் பேசி சிலரின் நட்பை இழப்பீர்கள். 23.6.2012-க்கு பின்னர் செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் சொத்து வாங்குவீர்கள். தள்ளிப் போன வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய உதவிகள் கிட்டும். தாய்வழி உறவினர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதைக் கூடும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருப்பார்கள். வருடம் பிறக்கும் போது ராகு 5-ம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகள் கோபப்படுவார்கள். பணம் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் கவனமாக இருங்கள். மூட்டு வலி, ஒற்றை தலை வலி, இரத்த சோகை வரக்கூடும். தாய்மாமன் வகையில் செலவுகள் வந்துப் போகும். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வழக்கறிஞரின் ஆலோசனையின்றி எந்த முடிவுகளும் எடுக்காதீர்கள். கேது 11-ம் வீட்டில் தொடர்வதால் ஷேர் மூலம் பணம் வரும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வெளிநாட்டிலிருப்பவர்களால் உதவிகள் கிடைக்கும். வேற்றுமொழி, மதத்தவர்களால் ஆதாயமடைவீர்கள். 1.12.2012 முதல் உங்கள் ராசிக்கு 4-ம் வீட்டில் ராகுவும், 10-ம் வீட்டில் கேதுவும் நுழைவதால் வேலைச்சுமை அதிகரிக்கும். நெருங்கிய உறவினர், நண்பரை இழக்க நேரிடும். வாகனம் அடிக்கடி பழுதாகும்.


சனிபகவான் உங்கள் சுகஸ்தானமான 4-ம் வீட்டிலேயே தொடர்வதால் இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. வாகனம் அடிக்கடி பழுதாகும். வீட்டை விரிவுப்படுத்தி கட்டுவீர்கள். தாயாருக்கு சிறுசிறு விபத்துகள் வந்து நீங்கும். தாய்வழி சொத்தை விற்று புது சொத்து வாங்குவீர்கள். யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். வேற்றுமதத்தினர்கள் உதவுவார்கள். இலவசமாக அறிமுகமாகும் கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி விடாதீர்கள். சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 3-ம் வீட்டில் அமர்வதால் இக்காலக்கட்டத்தில் திடீர் பணவரவு உண்டு.

வியாபாரிகளே! மார்ச் மாதத்திலிருந்து கணிசமாக லாபம் உயரும். வேலையாட்கள் அவ்வப்போது விடுப்பில் செல்வார்கள். அவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்காதீர்கள். 8.5.2011லிருந்து பழைய சரக்கு விற்றுத் தீரும். பழைய பாக்கிகளும் வசூலாகும். சலுகை திட்டங்கள் மூலம் புது வாடிக்கையாளர்களை கவர்ந்திழுப்பீர்கள். பங்குதாரர்கள் அவ்வப்போது புலம்பினாலும் ஒத்துழைப்பார்கள். ஆகஸ்டு, அக்டோபர், நவம்பர் மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புதுக் கிளைகள் தொடங்கும் வாய்ப்பும் வரும். கமிஷன், உணவு, பிளாஸ்டிக் வகைகளால் ஆதாயம் அதிகரிக்கும்.

உத்யோகஸ்தர்களே! 16.5.2012 வரை வீண் பழிகளை சுமக்க வேண்டி வரும். நேரம், காலம் பார்க்காமல் உழைத்தும் கடைசியில் மிஞ்சியதென்னவோ கெட்ட பெயர் தான் என்று அலுத்துக் கொள்ள வேண்டி வரும். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உத்யோகஸ்தானத்தை விட்டு விலகுவதால் உங்களை பாடாய்படுத்திய உயரதிகாரி இடம் மாறுவார். நல்ல மேலதிகாரி பணியில் வந்து சேர்வார். புது சலுகைகளும் கிடைக்கும். அதிக சம்பளத்துடன் வேறு நல்ல வாய்ப்புகளும் தேடி வரும். ஜீன், செப்டம்பர், நவம்பர் மாதங்களில் சம்பள உயர்வு உண்டு.

கன்னிப்பெண்களே! படிப்பை முடிக்க முடியாமல் தவித்தீர்களே! எந்த பாடப்பிரிவிலும் ஆர்வம் இல்லாமல் இருந்தீர்களே! இந்த ஆண்டில் படிப்பை முடிப்பீர்கள். வருடப் பிற்பகுதியில் வேலையும் கிடைக்கும். காதல் தோல்வியால் கலங்கியிருந்தீர்களே! பெற்றோர் பார்க்கும் வரன் உங்களுக்கும் பிடித்தமாக இருக்கும். மாணவர்களே! அறிவியல், கணிதப் பாடங்களில் அதிக கவனம் செலுத்துங்கள். கூடாப்பழக்கம் உள்ள நண்பர்களை விட்டு பிரிவீர்கள். மதிப்பெண் உயரும். போராடி புகழ் பெற்ற கல்வி நிறுவனத்தில் சேர்வீர்கள். கலைஞர்களே! வீண் பழி விலகும். திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகளும் வரும்.

இந்தப் புத்தாண்டு முற்பகுதியில் உங்களுக்கு சிரமங்களையும், பணப்பற்றாக்குறையையும் தந்தாலும் 17.5.2012 முதல் எதிலும் வெற்றியையும், யோகத்தையும் அள்ளித் தரும்.



# சிம்மம்

தாய் மண்ணின் மீதும், மொழியின் மீதும் தீராத தாகம் கொண்ட நீங்கள், கடல் தாண்டி போனாலும் கலாச்சாரத்தை மீற மாட்டீர்கள்.

உங்கள் யோகாதிபதி செவ்வாய் உங்கள் ராசியிலேயே அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் வீடு, மனை வாங்க முயற்சி செய்வீர்கள். சகோதரங்கள் உதவுவார்கள். சொத்து வழக்குகள் தீரும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதைக் கூடும். வேலைக் கிடைக்கும். சொந்த-பந்தங்கள் மதிப்பார்கள். வாடிய முகம் மலரும். பிள்ளைகளிடமிருந்த பிடிவாதம் நீங்கும். உங்களுக்கு 8-வது ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். அவ்வப்போது பணப்பற்றாக்குறையும் வரும். குடும்ப அந்தரங்க விஷயங்களையெல்லாம் வெளியில் சொல்லி ஆறுதல் தேட வேண்டாம். சுக்ரன் 6-ல் மறைந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வாகனத்தில் செல்லும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம்.

16.5.2012 வரை குருபகவான் ராசிக்கு 9-ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் எதிர்பார்த்த வகையில் பணம் வரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். சொத்து வாங்க பாதி பணம் தந்து மீதி பணம் தேடினீர்களே! இனி அது கிடைக்கும். வீடு, மனை சேரும். வங்கியில் வாங்கியிருந்த கடனை அடைப்பீர்கள். கோவில் கும்பாபிஷேக திருப்பணி கமிட்டியில் இடம் பிடிப்பீர்கள். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். கல்யாணம், காதுகுத்தி, மஞ்சள் நீராட்டு, கிரகப்பிரவேசம் என பல விசேஷங்களிலும் உங்களுக்கு முதல் மரியாதைக் கிடைக்கும். அதிக மைலேஜ் தரக் கூடிய வாகனம் வாங்குவீர்கள். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 10-ம் வீட்டில் அமர்வதால் எதிலும் அலட்சியமாக இல்லாமல் முன்யோசனையுடன் செயல்படப்பாருங்கள். அடுத்தவர்களை தாக்கிப் பேசுவது வேண்டாமே. கௌரவத்திற்கு ஆசைப்பட்டு ஆடம்பரச் செலவுகள் செய்துக் கொண்டிருக்க வேண்டாம். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளில் பாக்கி வைக்காதீர்கள். யாருக்கும் கேரண்டர் கையெழுத்திடாதீர்கள். பிள்ளைகளின் நட்பு வட்டங்களை கண்காணியுங்கள். உத்யோகத்தை அடிக்கடி இடமாற்றம் வரும். அவசரப்பட்டு வேறு நிறுவனத்திற்கு மாற வேண்டாம். அரசு அங்கீகாரம் இல்லாத வங்கிகளில் வைப்புத் தொகை வைக்க வேண்டாம்.

செவ்வாய் வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை ராசிக்குள்ளேயே வக்ரமாகி நிற்பதால் சில நேரங்களில் எதிலும் ஆர்வமில்லாமல் போகும். அவ்வப்போது கோபப்படுவீர்கள். 23.6.2012-க்கு பின்னர் செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் மனஇறுக்கம் விலகும். சகோதர வகையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிரச்சனைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

வருடம் பிறக்கும் போது ராகு 4-ம் வீட்டில் நிற்பதால் தாயாருக்கு சிறுசிறு அறுவை சிகிச்சைகள், மூட்டு வலி வந்து நீங்கும். பூர்வீக சொத்துப் பிரச்சனைகள் தலை தூக்கும். மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. தாய்மாமன் வகையில் கருத்து வேறுபாடுகள் வரக்கூடும். சிலர் வீடு மாற வேண்டிய நிர்பந்தம் உண்டாகும். சகோதர வகையில் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள். கேது 10-ம் வீட்டில் தொடர்வதால் மறைமுக எதிர்ப்பு, உத்யோகத்தில் வேலைச்சுமை, ஒருவித படபடப்பு, ஒற்றை தலை வலி வந்துப் போகும். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். அரசாங்க விஷயத்தில் அலட்சியம் காட்டாதீர்கள். பழைய கசப்பான சம்பவங்களை நினைத்து வருந்துவீர்கள். உங்கள் மீது சிலர் பழி சுமத்துவார்கள்.

சனிபகவான் உங்கள் ராசிக்கு 3-வது வீட்டில் அமர்ந்திருப்பதால் சவாலான காரியங்களையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அனுபவ அறிவை பயன்படுத்தி சில பிரச்னைகளுக்கு எதார்த்தமான தீர்வு காண்பீர்கள். வேற்றுமதத்தினர் உதவுவார்கள். வழக்கால் பணம் வரும். எதிர்பார்த்த விலைக்கு பழைய சொத்தை விற்பீர்கள். ஆனால் சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 2-ம் வீட்டில் பாதச்சனியாக அமர்வதால் சிறுசிறு விபத்துகள், குடும்பத்தில் சலசலப்புகள் வந்து நீங்கும்.


வியாபாரிகளே! சந்தை நிலவரம் குறித்து முழுமையான அறிவு கிடைக்கும். உணவு, கெமிக்கல், ஏற்றுமதி-இறக்குமதி, மர வகைகளால் அதிக ஆதாயமடைவீர்கள். ஆர்வமுள்ள வேலையாட்கள் அமைவார்கள். கடையை விரிவுப்படுத்தி கட்டுவீர்கள். சிலர் விசாலமான இடத்திற்கு மாற்றுவீர்கள். புதிதாக முதலீடு செய்யலாம். ஜனவரி, மே, ஜீன் மாதங்களில் வியாபாரம் சூடு பிடிக்கும். புது கிளைகள் தொடங்குவீர்கள். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். புது ஏஜென்சி எடுப்பீர்கள். பங்குதாரர்களை மாற்ற வேண்டிய சூழல் ஏற்படும். உங்களிடத்தில் முற்பகுதியில் புகழ் பெற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வீர்கள்.

உத்யோகஸ்தர்களே! அதிகாரிகள் மனம் விட்டு பேசுவார்கள். அலுவலகப் பிரச்னைகள் மட்டுமல்லாது அதிகாரிகளின் சொந்த பிரச்னைகளையும் தீர்த்து வைப்பீர்கள். சம்பளம் உயரும். பெரிய பதவியில் அமர்த்தப்படுவீர்கள். மூத்த அதிகாரி அடிக்கடி விடுப்பில் செல்வதால் அந்தப் பதவிக்குரிய பணிகளையும் திறம்பட முடித்து எல்லோரையும் வியக்க வைப்பீர்கள். இடமாற்றம், மறைமுக எதிர்ப்புகள், முகவரி இல்லாத குற்றச்சாட்டு கடிதங்களின் அடிப்படையில் சின்ன சின்ன விசாரணைகளை சந்திக்க வேண்டிய சூழல் வரும். அரசு நிறுவனங்களில் பணியாற்றும் சிலர் விருப்ப ஓய்வு கொடுத்து விட்டு தனியார் நிறுவனங்களுக்கு தாவுவீர்கள்.

கன்னிப்பெண்களே! மதில் மேல் பூனையாக இருந்த நிலை மாறும். உங்கள் ரசனைக்கேற்ற மணமகன் வந்தமைவார். கல்யாணம் சிறப்பாக முடியும். தாயாருடன் இருந்து வந்த கருத்துவேறுபாடுகள் விலகும். மாதவிடாய்க் கோளாறு, தூக்கமின்மை, கண் எரிச்சல் நீங்கும். மாணவர்களே! படித்தால் மட்டும் போதாது விடைகளை எழுதிப் பாருங்கள். கடினமான பாடங்களிலும் அதிக மதிப்பெண் பெறுவீர்கள். கவிதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்துக் கொண்டு பரிசு, பாராட்டு பெறுவீர்கள். நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள்.

கலைத்துறையினர்களே! கௌரவிக்கப்படுவீர்கள். உங்களுக்கு எதிராக விமர்சனங்கள் வந்தாலும் அஞ்ச வேண்டாம். பெரிய நிறுவனங்களிலிருந்து புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

ஆகமொத்தம் இந்தப்புத்தாண்டு சவால்களில் வெற்றி பெற வைப்பதுடன், சாதிக்க வைப்பதாகவும் அமையும்.



# கன்னி

மனதில் பட்டத்தை பளிச் சென்று பேசி உண்மைகளை வெட்ட வெளிச்சத்திற்கு கொண்டு வரும் நீங்கள், சில சமயங்களில் பலருக்கு எதிரியாகவே தெரிவீர்கள்.

உங்கள் பிரபல யோகாதிபதி சுக்ரன் 5-ம் வீட்டில் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பங்கள் விலகி அமைதி நிலவும். பூர்வீக சொத்து பங்கை கேட்டு வாங்குவீர்கள். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். மகள் உங்களைப் புரிந்துக் கொள்வாள். மகனுக்கு நல்ல மணப்பெண் அமைவார். அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் புது வேலைக் கிடைக்கும். வீட்டைக் கட்டி முடிக்க எதிர்பார்த்த வங்கிக் கடன் உதவி கிடைக்கும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். உங்கள் ராசியை சந்திரன் பார்ப்பதால் எதிலும் ஆர்வம் பிறக்கும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

16.5.2012 வரை உங்கள் ராசிக்கு 8-வது வீட்டில் குரு மறைந்திருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும் என்றாலும் எதிர்பாராத வகையில் பணவரவும் உண்டு. பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். சொந்த-பந்தங்களுக்காக அலைய வேண்டி வரும். வீண்பழிச் சொல்லுக்கு ஆளாவீர்கள். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 9-ம் வீட்டில் குருபகவான் அமர்வதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் நடக்கும். மனைவியுடன் இருந்த மோதல்கள் நீங்கும். குழந்தை பாக்யம் உண்டாகும். அரசு சம்பந்தப்பட்ட வேலைகள் விரைந்து முடியும். புது வேலைக்கும் முயற்சி செய்தீர்களே! இதைவிட அதிக சம்பளம், சலுகையோடு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். ஏளனமாகவும், இழிவாகவும் திட்டியவர்கள் எல்லாம் இனி உங்களை பாராட்டுவார்கள். புதிதாக நிலம், வீடு வாங்குவீர்கள். பூர்வீக சொத்தை சீரமைப்பீர்கள். தாய்வழியில் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். எதிர்பார்த்து காத்திருந்த அயல்நாடு பயணம் சாதகமாக அமையும்.

செவ்வாய் வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை 12-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் சுபச்செலவுகள் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களால் அவ்வப்போது அலைச்சல் இருந்தாலும் ஆதாயமுண்டு. வழக்கில் அவசரம் வேண்டாம். 23.6.2012-க்கு பின்னர் செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் மறைமுக எதிர்ப்புகள் விலகும். உங்களை உதாசீனப் படுத்தியவர்களெல்லாம் உங்கள் உதவியை நாடி வருவார்கள்.

வருடம் பிறக்கும் போது உங்கள் ராசிக்கு 3-ல் ராகு அமர்ந்திருப்பதால் சொத்து வாங்குவீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும். சவால்களை சமாளிக்கும் மனோபலம் அதிகரிக்கும். இளைய சகோதர வகையில் இருந்த மனத்தாங்கல் நீங்கும். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். வழக்குகள் சாதகமாகும். ஷேர் மூலம் பணம் வரும். வேற்றுமதம், மொழி, இனத்தவரால் திடீர் திருப்பம் உண்டாகும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். 9-ம் வீட்டில் கேது நிற்பதால் தோல்விமனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். அடிமனதில் இருந்து வந்த கவலைகள் நீங்கும். ஆழ்ந்த உறக்கம் வரும். கொடுக்கல்-வாங்கலில் இருந்த சிக்கல்கள் தீரும். தந்தையாரின் உடல் நலம் பாதிக்கும். அவருடன் மனத்தாங்கலும் வந்து நீங்கும். அடிக்கடி வெளியூர் பயணம் செல்ல வேண்டி வரும். 1.12.2012 முதல் உங்கள் ராசிக்கு 2-ம் வீட்டில் ராகுவும், 8-ம் வீட்டில் கேதுவும் நுழைவதால் பேச்சில் தடுமாற்றம், விரக்தி, ஏமாற்றம் வந்து போகும். யாரையும் நம்பி எந்த முடிவு எடுக்க வேண்டாம்.

சனிபகவான் ராசிக்கு 2-ம் வீட்டில் அமர்ந்து பாதச் சனியாக தொடர்வதால் வீண் அலைச்சல், டென்ஷன் வந்துப் போகும். ஆனால் யோகாதிபதி சனி உச்சமாகி அமர்வதால் திடீர் பணவரவு, செல்வாக்கு யாவும் உண்டு. என்றாலும் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். சில விஷயங்களுக்கு உணர்ச்சிவசப்படாமல் அறிவுப் பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். அடுக்கடுக்கான வேலைகளால் ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். ஆன்மிகத்தில் மனம் லயிக்கும். வெளிமாநிலப் புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். மனதில் இனம்புரியாத கவலைகள் வந்துப் போகும். பணம், நகையை கவனமாக கையாளுங்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்யப் போய் வீண் பழிக்கு ஆளாவீர்கள். பார்வைக் கோளாறு, பல் வலி வந்துப் போகும். கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாமே. சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்குள்ளேயே ஜென்மச் சனியாக அமர்வதால் இக்காலக்கட்டத்தில் மனஇறுக்கம், வீண் செலவு, விரையம், ஒருவித படபடப்பு, நம்பிக்கையின்மை வந்துச் செல்லும்.


வியாபாரிகளே! தேங்கிக்கிடந்த சரக்குகளை சாமார்த்தியமாக விற்றுத்தீர்ப்பீர்கள். பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். மே மாதத்தில் வியாபாரத்தை விரிவுபடுத்த புதிய தொடர்புகள் கிடைக்கும். ஜீன், ஜீலை, நவம்பர் மாதங்களில் எதிர்பாராத திடீர் திருப்பங்களும், அதிரடி லாபங்களும் உண்டாகும். கடையை விசாலமான இடத்திற்கு மாற்றுவீர்கள். புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உணவு, புரோக்கரேஜ், கமிசன், எலக்ட்ரிக்கல் வகைகளால் ஆதாயமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடுகள் மறையும்.

உத்யோகஸ்தர்களே! பதவி உயர்வு கிடைக்காமல் தவித்தீர்களே! சக ஊழியர்களாலும் தர்மசங்கடமான சூழ்நிலைக்கு தள்ளப் பட்டீர்களே! இனி அந்த அவல நிலை மாறும். எல்லோரும் மதிப்பார்கள். சம்பள உயர்வு, பதவி உயர்வுக்காக நீங்கள் தொடுத்த வழக்கில் ஜீன், ஜீலை மாதங்களில் நல்ல தீர்ப்பு வரும். வேறு நல்ல வேலையும் தேடி வரும். மேலதிகாரியின் ஒத்துழைப்பு இனி கிடைக்கும். ஏழரைச் சனி இருப்பதால் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். மூத்த அதிகாரிகளைப் பற்றி குறை கூறாதீர்கள். முக்கிய பதிவேடுகளை கவனமாக கையாளுங்கள்.

கன்னிப்பெண்களே! உயர்கல்வியில் ஆர்வம் பிறக்கும். விடுபட்ட பாடத்தில் வெற்றி பெறுவீர்கள். காதல் தோல்வியால் துவண்டிருந்தீர்களே! இனி உங்கள் ரசனைக்கேற்ற வாழ்க்கைத்துணை அமைவார்.

கலைத்துறையினர்களே! ஒருபுறம் விமர்சனம் இருந்தாலும் மற்றொரு புறம் கடின உழைப்பால் சாதித்துக் காட்டுவீர்கள்.

இந்தப் புத்தாண்டு சோர்ந்திருந்த உங்களை சுறுசுறுப்பாக்குவதுடன் பதவி புகழையும் பணத்தையும் தந்து உயர வைக்கும்.



# துலாம்

எதார்த்தமான முடிவுகள் எடுத்து மற்றவர்களை வியக்க வைக்கும் நீங்கள், கேள்வி ஞானம் அதிகமுள்ளவர்கள்.

உங்கள் ராசிக்கு லாப வீட்டில் செவ்வாய் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் உங்களின் ஆளுமைத்திறன் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து யோசிப்பீர்கள். முன்பணம் தந்து முடிக்கப்படாமல் இருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப் பதிவு செய்வீர்கள். பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உடன்பிறந்தவர்கள் பாசமழைப் பொழிவார்கள். கமிஷன் மூலம் ஆதாயமடைவீர்கள். மனைவிவழியில் செல்வாக்கு உயரும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். தாயாரின் உடல் நலம் சீராகும். புதன் சாதகமாக இருப்பதால் அயல்நாட்டிலிருக்கும் நண்பர்களால் ஆதாயம் உண்டு. வெளிநாடு சென்று வருவீர்கள். வேற்று இனத்தவர்களின் ஆதரவு கிட்டும். குலதெய்வ கோவிலை புதுப்பிப்பீர்கள். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். புது வேலைக் கிடைக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். நிலுவையில் இருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றுவீர்கள். தாய்வழியில் அனுகூலம் உண்டாகும். அரசு காரியங்கள் விரைந்து முடியும்.

16.5.2012 வரை உங்கள் ராசிக்கு 7-ம் வீட்டில் குரு அமர்ந்திருப்பதால் வர வேண்டிய பணம் கைக்கு வரும். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பு கிடைக்கும். பழைய சிக்கல்களை பேசி தீர்ப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வசதி வாய்ப்புகள் இருந்தும் வீட்டில் விளையாட ஒரு குழந்தை இல்லையே என தவித்த பெற்றோருக்கு அழகான வாரிசு உருவாகும். பிள்ளைகளால் சமூகத்தில் மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட கல்யாணப் பேச்சு வார்த்தை கூடி வரும். பொது விழாக்கள், சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மூத்த சகோதரிக்கு திருமணம் நிச்சயமாகும். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் 8-ம் வீட்டில் மறைவதால் கணவன்-மனைவிக்குள் வீண் சந்தேகம் வரும். எதிர்பாராத பயணங்களும், அலைச்சல்களும் வந்துப் போகும். அரசாங்க அதிகாரிகள், வி.ஐ.பிகளுடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். வீடு கட்ட வங்கிகளில் பணம் வாங்கியிருந்தவர்கள் சில தவணைகளை குறிப்பிட்ட நேரத்தில் செலுத்த முடியாத அளவிற்கு தர்ம சங்கடத்தில் மூழ்கக் கூடும். நண்பர், உறவினர் சிலர் உங்களை தவறானப் போக்கிற்கு தூண்டுவார்கள். இரத்த அழுத்தம், சளித்தொந்தரவு, இனந்தெரியாத கவலைகள் வந்துப் போகும். சித்தர் பீடங்களுக்கு மறவாமல் செல்லுங்கள். குலதெய்வ கோவிலை புதுப்பிப்பீர்கள்.

வருடம் பிறக்கும் போது 2-ம் வீட்டில் ராகு அமர்ந்திருப்பதால் பேச்சில் அதிகம் கடுமை காட்டாதீர்கள். சில நேரங்களில் நீங்கள் விளையாட்டாக பேசப் போய் அது விபரீதமாக முடியும். குடும்பத்தில் சலசலப்புகள் வந்து நீங்கும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். கேது 8-ம் வீட்டில் நிற்பதால் திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். பழைய வழக்கில் வழக்கறிஞரை கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பது நல்லது. வெளிவட்டாரத்தில் அலைச்சல் இருக்கும். கை, காலில் காயம், வயிற்றுக் கோளாறு, மூட்டு வலி மற்றும் நெஞ்சு எரிச்சல் வந்து நீங்கும். 1.12.2012 முதல் உங்கள் ராசிக்குள் ராகுவும், 7-ல் கேதுவும் நுழைவதால் மனக்குழப்பம், எதையோ இழந்ததைப் போல் ஒரு வித கவலைகள், படபடப்பு, தலைச்சுற்றல், பல் வலி வந்து நீங்கும். மனைவிக்கு கர்ப்பப்பை கோளாறு, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வரக்கூடும்.

ஜன்மச் சனி தொடர்வதால் பழைய பிரச்னைகள் தலைத்தூக்கும். கணவன்-மனைவிக்குள் சின்ன சின்ன சண்டைகள் வந்துப் போகும். உங்கள் யோகாதிபதி சனிபகவான் உச்சமாகி ராசிக்குள் அமர்வதால் பணம் வரும். குழந்தை பாக்யம் கிடைக்கும். ஆனால் நெருங்கிய நண்பர்கள், உறவினர்களாக இருந்தாலும் யாருக்கும் ஜாமீன், கேரண்டர் கையெழுத்திட வேண்டாம். பெரிய பதவியில் இருப்பவர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். இரத்தத்தில் சர்க்கரையின் அளவை பரிசோதித்துக் கொள்ளுங்கள். பணவரவு இருந்தாலும் வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 12-ம் வீட்டில் அமர்வதால் இக்காலக்கட்டத்தில் சற்றே அலைச்சலும், சுபச் செலவுகளும் வரும்.


வியாபாரிகளே! முடங்கிக் கிடந்த நீங்கள் புத்துயிர் பெறுவீர்கள். பழைய கடையை புதுப்பித்து விரிவுப்படுத்துவீர்கள். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பழைய பாக்கிகள் வசூலாகும். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். ஆகஸ்டு, செப்டம்பர், டிசம்பர் மாதங்களில் லாபம் அதிகரிக்கும். சந்தைநிலவரம் அறிந்து புதிய சரக்குகள் கொள்முதல் செய்யுங்கள். வியாபார நெளிவு, சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். தள்ளிப் போன ஒப்பந்தங்கள் தேடி வரும். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த சில விளம்பர யுத்திகளை கையாளுவீர்கள். கண்ணாடி, துணி, ரியல் எஸ்டேட், பெட்ரோல், டீசல் வகைகளால் லாபமடைவீர்கள். கூட்டுத் தொழிலில் விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வருவார்கள்.

உத்யோகஸ்தர்களே! உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். சக ஊழியர்கள் பகையை மறந்து இனி உங்களுக்கு உதவுவார்கள். உங்களை உருகுலைய வைத்த மேலதிகாரி வேறிடத்திற்கு மாற்றப்படுவார். புது அதிகாரி உங்களை மதிப்பார். இழுபறியாக இருந்த பதவியுயர்வு இப்போது கிடைக்கும். சம்பளம் கூடும். பிப்ரவரி, மார்ச், ஆகஸ்டு மாதங்களில் பெரிய வாய்ப்புகள் தேடி வரும். கௌரவப் பதவிகள் கிடைக்கும்.

கன்னிப் பெண்களே! காதல் விவகாரங்களை தள்ளி வைத்து விட்டு உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். வேலைக் கிடைக்கும். பெற்றோரின் விருப்பப்படி திருமணம் முடியும். முகப்பரு, பசியின்மை, ஹார்மோன் கோளாறுகள் வந்து நீங்கும். காய், கனிகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். மாணவர்களே! புத்தகத்தை பிரித்தாலே தூக்கம் வந்ததே! இனி உற்சாகமாக படிப்பீர்கள். எதிர்பார்த்த கல்விநிறுவனத்தில் உயர்கல்வி தொடர இடம் கிடைக்கும். விளையாட்டில் பதக்கம் உண்டு.

கலைத்துறையினர்களே! எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். அவ்வப்போது வீண் வதந்திகளும் வரக்கூடும். புது வாய்ப்புகள் தேடி வரும்.

இந்தப் புத்தாண்டு கடந்த ஆண்டை விட வளர்ச்சியையும், செல்வாக்கையும் தருவதாக அமையும்.



# விருச்சிகம்

எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட நீங்கள், புரட்சிகரமான தொலை நோக்குத் திட்டங்கள் தீட்டுவதில் வல்லவர்கள்.

சுக்ரன் சாதகமான நட்சத்திரங்களில் சென்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். வி.ஐ.பிகள் உதவுவார்கள். அடுக்கடுக்காக செலவுகள் வந்தாலும் அதற்கேற்ற வருமானமும் உண்டு. குடும்பத்தில் ஓரளவு நிம்மதி உண்டு. அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். பழைய உறவினர், நண்பர்களை சந்திப்பீர்கள். உங்கள் ராசிநாதன் செவ்வாய் வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை 10-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் புது பொறுப்பும், பதவியும் தேடி வரும். வேலைக் கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். ஒரு சொத்தை விற்று பழைய சிக்கலைத் தீர்ப்பீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாகும். புதிதாக வீடு, வாகனம் வாங்குவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். தாய்வழியில் மதிப்பு, மரியாதைக் கூடும். மனைவிவழி உறவினர்களால் உதாசீனப் படுத்தப்பட்டீர்களே! இனி மாமனார், மாமியார், மச்சினர் மதிப்பார்கள்.

16.5.2012 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டில் மறைந்திருப்பதால் சில நேரங்களில் வீண் டென்ஷன், மனஉளைச்சல், வேலைச்சுமை, வீண் பழி, செறிமானக் கோளாறு வந்து நீங்கும். மறைமுக எதிரிகளை இனம் கண்டறிவீர்கள். எதிரிகளில் சிலர் நண்பர்களாவார்கள். உள்மனதில் ஒருவித போராட்டம் எழும்பும். பூர்வீக சொத்து சம்பந்தமாக வழக்குகள் வேண்டாமே. சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களை இரண்டு மூன்று முறை அலைந்து முடிக்க வேண்டி வரும். அதிக வட்டிக்கு வாங்கிய கடனில் ஒருபகுதியை கொடுத்து முடிப்பீர்கள், குலதெய்வ கோவிலை புதுப்பிப்பீர்கள். தங்க ஆபரணங்கள், வீட்டுப் பத்திரங்களை கவனமாக கையாளுங்கள். யாருக்கும் ஜாமீன் கையெழுத்திடவேண்டாம். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உறவினர்கள், நண்பர்களுடன் அதிக உரிமையுடன் பேசி பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 7-ம் வீட்டில் நுழைவதால் திடீர் திருப்பங்கள் உண்டாகும். சோர்ந்துக் கிடந்த நீங்கள் உற்சாகமாவீர்கள். எதிலும் ஆர்வம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முழுமையடையும். வீட்டில் தாமதமான சுப நிகழ்ச்சிகள் இனி கோலாகலமாக நடக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த சந்தேகம், ஈகோ பிரச்னைகள் நீங்கும். குழந்தை பாக்யம் கிடைக்கும். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. தள்ளிப் போன வெளிநாட்டுப் பயணம் சாதகமாக அமையும். மகனுக்கு நீங்கள் எதிர்பார்த்ததைப் போல நல்ல குடும்பத்திலிருந்து பெண் அமையும். வீட்டை கட்டி முடிக்க எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். தாயாருக்கு இருந்த நெஞ்சு வலி நீங்கும். செலவுகளை குறைத்து இனி சேமிக்கத் தொடங்குவீர்கள். பூர்வீகச் சொத்திலிருந்த பிரச்சனை தீரும். பழைய சொந்தங்கள் தேடி வரும். சகோதரர் ஓடி வந்து உதவுவார். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். நினைத்திருந்த டிசைனில் ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

வருடம் பிறக்கும் போது ராசிக்குள் ராகு நிற்பதால் தலைச் சுற்றல், குமட்டல், நாக்கில் கசப்பு வந்து நீங்கும். சில நேரங்களில் முன்கோபத்தால் எடுத்தெறிந்து பேசுவீர்கள். நேரம் கிடைக்கும் போது யோகா, தியானம் செய்யத் தவறாதீர்கள். எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது. 7-ம் வீட்டில் கேது அமர்வதால் கணவன்-மனைவிக்குள் சந்தேகத்தால் அடிக்கடி சண்டை வரும். உங்கள் இருவருக்குள் பிரச்னையை ஏற்படுத்த சிலர் முயற்சி செய்வார்கள். மற்றவர்கள் சொல்வதை கேட்டு மனைவி, மனைவிவழி உறவினர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். 1.12.2012 முதல் உங்கள் ராசிக்கு 6-ல் கேதுவும், 12-ல் ராகுவும் நுழைவதால் தைரியம் கூடும். பிரச்னைகளின் ஆணிவேரை கண்டறிவீர்கள். ஆட்சியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். திடீர் பணவரவு உண்டு. அரசு அதிகாரிகள் நண்பராவார்கள். இளைய சகோதர வகையில் இருந்த பிணக்குகள் நீங்கும்.

சனிபகவான் ராசிக்கு 12-ம் வீட்டில் விரையச் சனியாக தொடர்வதால் வருங்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பழைய கடன் பிரச்சனை அவ்வப் போது மனசை வாட்டும். ஓரளவு பணவரவு உண்டு. ஆன்மீகவாதிகள், சித்தர்களின் அறிமுகம் கிடைக்கும். எல்லோருக்கும் நல்லது செய்தும் கெட்டப் பெயர்தான் மிஞ்சும். சிலர் உங்களைப் பற்றிய வதந்திகளை பரப்பிவிடுவார்கள். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு லாப வீட்டில் அமர்வதால் இக்காலக்கட்டத்தில் திடீர் பணவரவு உண்டு. வேலைக் கிடைக்கும். வாகனம் வாங்குவீர்கள்.

வியாபாரிகளே! உங்களுக்கு பின்னால் தொழில் தொடங்கியவர்கள் கூட முன்னேற்றமடைந்தார்களே! வட்டிக்கு வாங்கி கடையை விரிவுபடுத்தி நட்டப்பட்டீர்களே! இனி உங்களின் மாறுபட்ட அணுகுமுறையால் லாபமீட்டுவீர்கள். ஜனவரி, ஜீன், ஜீலை, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் லாபம் அதிகரிக்கும். ஆகஸ்டு மாதத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வேலையாட்களின் தொந்தரவு குறையும். வாடிக்கையாளர்களை கவர புது சலுகைகளை அறிவிப்பீர்கள். கெமிக்கல், கமிஷன், வாகன உதிரி பாகங்களால் லாபமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பிரச்சனைகள் ஓயும். பங்குதாரர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

உத்யோகஸ்தர்களே! ஓடி ஓடி வேலை பார்த்தும் கெட்டப் பெயர்தானே கிடைத்தது! இனி அந்த அவலநிலை மாறும். மேலதிகாரிக்கு ஆலோசனை வழங்கும் அளவிற்கு நெருக்கமாவீர்கள். ஜீன், ஜீலை மாதங்களில் பதவியுயர்வு, சம்பள உயர்வு தடையில்லாமல் கிடைக்கும். சக ஊழியர்களுடன் இருந்த பனிப்போர் நீங்கும். கேட்ட இடத்திற்கு டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு வருவீர்கள்.

கன்னிப் பெண்களே! கசந்த காதல் இனிக்கும். தோலில் நமைச்சல், தேமல் நீங்கும். பெற்றோரின் ஆலோசனையை ஏற்பீர்கள். போலியாக பழகியவர்களிடமிருந்து ஒதுங்குவீர்கள். வேலை கிடைக்கும். கண்ணுக்கழகான கணவர் வந்தமைவார். மாணவர்களே! ஏனோ தானோ என்று படிக்காமல் இனி ஆர்வத்துடன் படிப்பீர்கள். வகுப்பறையில் ஆசிரியர்கள் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். கணிதம், அறிவியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெறுவீர்கள்.

கலைத்துறையினர்களே! பழைய நிறுவனங்களில் இருந்து புதிய வாய்ப்புகள் வரும். கிசுகிசுக்கள் ஓயும். போராடி படைப்புகளை வெளியிடுவீர்கள்.

இந்தப் புத்தாண்டு ஆரம்பத்தில் பணப்பற்றாக்குறையை தந்தாலும் மத்தியப் பகுதியிலிருந்து கனவுகளை நனவாக்கும்.



# தனுசு

தன் சொந்த உழைப்பால் உயர விரும்பும் நீங்கள், பாதை மாறி சென்று பணம் சம்பாதிக்க தயங்குவீர்கள். பாவப்புண்யம் அடிக்கடி பார்ப்பீர்கள்.

உங்களுக்கு சுக வீட்டில் இந்தாண்டு பிறப்பதால் மனதில் நிம்மதியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் ஏற்படும். திருமணம், சீமந்தம், காதுகுத்தி என வீடு களைகட்டும். பழைய உறவினர்கள் தேடி வந்து பேசுவார்கள். ஷேர் மூலம் பணம் வரும். சுக்ரன் சாதகமாக இருப்பதால் பணவரவு அதிகரிக்கும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியை தொடங்க லோன் கிடைக்கும். விலை உயர்ந்த நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். மனைவிவழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். புதன் சாதகமாக இருக்கும் போது இந்தாண்டு பிறப்பதால் சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பழைய சொத்தை நல்ல விலைக்கு விற்று புது வீடு வாங்குவீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

16.5.2012 வரை உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் குரு அமர்ந்திருப்பதால் நினைத்த காரியம் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வரும். குடும்பத்தில் நல்லது நடக்கும். கோவில் கோவிலாக அலைந்தும் நமக்கு ஒரு வாரிசு கூட இல்லையே என வருந்திய தம்பதியர்களுக்கு குழந்தைபாக்யம் உண்டாகும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். மகளுக்கு வெகுநாட்களாக தேடி அலைந்த வரன் பார்க்கும் படலம் இப்பொழுது முடியும். வேலையில்லாதவர்களுக்கு கைநிறைய சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும். தாய்மாமன் வகையில் உதவிகள் கிடைக்கும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டில் சென்று மறைவதால் வீண் டென்ஷன், விரையம், ஏமாற்றம், மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். கணவன்-மனைவிக்குள் சந்தேகம், ஈகோ பிரச்னைகள் வந்துப் போகும். பணத்தட்டுப்பாட்டை சமார்த்தியமாக சமாளிப்பீர்கள். உறவினர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சொத்து சம்பந்த பட்ட வழக்கில் வழக்கறிஞரை மாற்றுவீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். ஆன்மீகச் சிந்தனை, பொது அறிவு, யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். யாருக்காகவும் பைனான்ஸில் பணம் வாங்கித் தரவேண்டாம். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். உங்களின் கையெழுத்திட்ட வங்கிக் காசோலையையும், சொத்துப் பத்திரத்தையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள்.

22.6.2012 வரை செவ்வாய் 9-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். தந்தையார் சில நேரங்களில் கோபப்படுவார். பாதிபணம் தந்து முடிக்காமல் இருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப் பதிவு செய்வீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். சகோதரிக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். அதிகாரப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். புது சொத்து வாங்குவீர்கள். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றி புதுசு வாங்குவீர்கள்.

வருடம் பிறக்கும் போது ராகு 12-ம் வீட்டில் மறைந்திருப்பதால் மறைமுக ஆதாயம் உண்டாகும். மின்சார, சமையலறை சாதனங்கள் பழுதாகும். திடீர் பயணங்களும், அலைச்சல்களும் அதிகரிக்கும். எதிர்மறை சிந்தனைகள் தோன்றும். வெளிவட்டாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கேது 6-ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றிப் பெறுவீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும். அயல்நாடு செல்ல எதிர்பார்த்து காத்திருந்த விசா கிடைக்கும். ஹிந்தி, தெலுங்கு மொழி பேசுபவர்களால் ஆதாயம் உண்டாகும். காற்றோட்டம், குடிநீர் வசதியில்லாமல் தவித்துக் கொண்டிருந்த வீட்டிலிருந்து எல்லா வசதிகளும் நிறைந்த வீட்டிற்கு குடிபுகுவீர்கள். மகளின் கல்யாணத்தை போராடி முடிப்பீர்கள்.

சனிபகவான் உங்களின் லாப வீட்டில் தொடர்வதால் திடீர் யோகம், பணவரவு உண்டாகும். பொது விழாக்கள், கல்யாண, கிரகப் பிரவேச சுபநிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனையெல்லாம் பைசல் செய்வீர்கள். வழக்கு சாதகமாகும். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. தூரத்து சொந்த-பந்தங்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்பொழுது உங்களுக்கு உதவ முன்வருவார்கள். ஆனால் 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 10-ம் வீட்டில் சனிபகவான் வக்ரமாகி அமர்வதால் இக்காலகட்டத்தில் உத்யோகத்தில் வேலைச்சுமை இருக்கும்.


வியாபாரிகளே! சந்தை நிலவரம் அறிந்து புது முதலீடு செய்வது நல்லது. முன் பின் அனுபவம் இல்லாத துறையில் மற்றவர்களை நம்பி கைப்பொருளை இழக்க வேண்டாம். கொடுக்கல்-வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும். அனுபவ மிக்க வேலையாட்களை பணியில் சேர்ப்பீர்கள். ரியல் எஸ்டேட், பதிப்பகம், இரும்பு, துரித உணவு வகைகளால் லாபம் பெறுவீர்கள். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்றுத் தீரும். ஏப்ரல் மாதத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் புது ஏஜென்சி எடுப்பீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் புரிந்து கொள்ளாமல் அவ்வப்போது பிரச்சனை செய்தார்களே! இனி பணிந்து போவார்கள். பழைய பங்குதாரர்களும் தேடி வருவார்கள்.

உத்யோகஸ்தர்களே! எதற்கெடுத்தாலும் உங்களை குறை சொல்லுவதற்கென்றே ஒரு கூட்டம் இருந்ததே! இனி உங்களின் மதிப்பு மரியாதை கூடும். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் புது வாய்ப்புகள் வரும். சம்பள பாக்கியும் கைக்கு வரும். ஏபரல் மாதத்தில் அயல்நாட்டு நிறுவனங்கள் அழைக்கும். இந்தாண்டு முழுக்க வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருக்கும். செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் உயரதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைத்தெறிவீர்கள். உங்கள் மீது தொடரப்பட்ட பொய் வழக்கும் தள்ளுபடியாகும்.

கன்னிப்பெண்களே! ஆடை அணிகலன்கள் சேரும். கல்யாணம் விமர்சையாக முடியும். பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள். தடைப்பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள். உடல் உஷ்ணத்தால் வயிற்று வலி, சைனஸ் தொந்தரவு வந்து நீங்கும். மாணவர்களே! பிணக்கு தந்த கணக்குப் பாடத்தில் மதிப்பெண் கூடும். கூடா பழக்கம் விலகும். எதிர்பார்த்த பாடப் பிரிவில் உயர் கல்வியைத் தொடர்வீர்கள்.

கலைத்துறையினர்களே! கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொள்ளப்பாருங்கள். வீண் வதந்திகள் வரக்கூடும். உங்களின் படைப்புகளுக்கு சிலர் உரிமை கொண்டாடுவார்கள்.

கடந்தாண்டை விட இந்தாண்டு உங்களின் சாதனைப் பட்டியலை நீள வைக்கும்.



# மகரம்

அமைதியையும், அன்பையும் விரும்பும் நீங்கள், எல்லோரும் எல்லாம் பெற வேண்டுமென்று நினைப்பீர்கள்.

உங்களுக்கு 3-வது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் நினைத்தது நிறைவேறும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. தடைகள் யாவும் நீங்கும். பிரபல யோகாதிபதியான சுக்ரன் உங்கள் ராசிக்குள் நிற்கும் போது இந்தாண்டு பிறப்பதால் அடிப்படை வசதிகள் பெருகும். இதமானப் பேச்சால் காரியம் சாதிப்பீர்கள். தோற்றப் பொலிவுக் கூடும். தோலில் நமைச்சல் நீங்கும். புதிதாக வீடு, வாகனம் வாங்க எதிர்பார்த்த வங்கிக் கடன் உதவி கிடைக்கும். சிலர் வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கடனாக கொடுத்த பணம் கைக்கு வரும். மனைவிவழியில் மதிப்பு, மரியாதைக் கூடும். அடகிலிருந்த நகையை மீட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். அடிக்கடி வெளியூர் பயணம் செல்ல வேண்டி வரும். வர வேண்டிய பூர்வீக சொத்துப் பங்கை கேட்டு வாங்குவீர்கள். குடும்பத்தினருடன் குலதெய்வக் கோவிலுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பள்ளிக் கல்லூரி கால நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

16.5.2012 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 4-ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் இனந்தெரியாத கவலைகள் வந்துப் போகும். தாயாருக்கு கை, கால் வலி, சளித் தொந்தரவு வந்து நீங்கும். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். செலுத்த வேண்டிய வரிகளை தாமதப்படுத்த வேண்டாம். புதியவர்களை நம்பி பழைய நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். சித்தர்களை சந்தித்து அருள் ஆசி பெறுவீர்கள். வாகனத்தை கொஞ்சம் கவனமாக இயக்குங்கள். விபத்துகள் நிகழக்கூடும். வழக்குகளில் அவசர முடிவுகள் வேண்டாம். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டிலேயே தொடர்வதால் பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேர்வீர்கள். வறண்டிருந்த பணப்பை கொஞ்சம் நிரம்ப ஆரம்பிக்கும். கல்வியாளர்கள், ஆன்மீகவாதிகளின் நட்பு கிடைக்கும். தாயாருக்கு இருந்த நோய் குணமாகும். அவருடன் இருந்து வந்த கருத்து மோதல்களும் விலகும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்யம் உண்டாகும். பிள்ளைகளால் மதிப்பு, மரியாதைக் கூடும். மகளுக்கு ஏதோ ஒரு வகையில் தடைபட்டுக் கொண்டிருந்த திருமணம் இப்பொழுது கூடிவரும். வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டிற்கு குடி புகுவீர்கள். சொத்து விஷயங்களில் இருந்து வந்த சிக்கல்களுக்கு அதிரடியான தீர்வு காண்பீர்கள். வேலைத் தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு கைநிறைய சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும். வெளிநாட்டினரால் திடீர் திருப்பங்கள் ஏற்படும்.

வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை 8-ம் வீட்டிலேயே அமர்ந்திருக்கும் செவ்வாய் அவ்வப்போது அலைகழிப்பார். பழைய பிரச்னைகள் தலைத்தூக்கும். குடும்பத்தில் வீண் சந்தேகம், மனைவியுடன் வாக்குவாதங்கள் வரக்கூடும். அடிக்கடி வாகனம் பழுதாகும். சாலைகளை கடக்கும் போது கவனம் தேவை. மின்சார சாதனங்களை நிதானமாக கையாளுங்கள். சொத்து வாங்குவது, விற்பதில் தாய் பத்திரத்தை சரி பார்த்துக் கொள்வது நல்லது. வழக்கில் வழக்கறிஞரின் ஆலோசனையின்றி எந்த முடிவும் எடுக்க வேண்டாம்.

கேது உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகளின் பொறுப்பில்லாத் தனத்தை நினைத்து வருந்துவீர்கள். பூர்வீக சொத்தைப் பெற அதிகம் செலவு செய்ய வேண்டி வரும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். ராகு உங்கள் ராசிக்கு 11-ம் வீட்டில் அமர்வதால் பழைய சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகி வெற்றி காண்பீர்கள். கடனாக கொடுத்த பணம் கைக்கு வரும். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். ஸ்பெக்குலேஷன் வகைகள் மூலம் பணம் வரும். ஆனால் 1.12.2012 முதல் உங்கள் ராசிக்கு 4-ல் கேதுவும், 10-ல் ராகுவும் நுழைவதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலைத்தூக்கும். தாயாரின் உடல் நலம் பாதிக்கும். வாகன விபத்துகள், காரியத் தாமதம், வீண் அலைச்சல், டென்ஷன் வந்துப் போகும். வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும்.

சனிபகவான் உங்கள் ராசிக்கு 10-ம் வீட்டில் தொடர்வதால் உங்களின் திறமைகள் வெளிப்படும். பணபலம் கூடும். புது பதவிகளும், பொறுப்புகளும் தேடி வரும். பொது விழாக்கள், கல்யாண, சீமந்தம், கிரகப் பிரவேசம், காதுகுத்து போன்ற சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு சாதகமான தீர்வு கிடைக்கும். வெளிநாட்டிலிருக்கும் உறவினர், நண்பர்களால் திடீர் திருப்பங்கள் ஏற்படும். நட்பு வட்டம் விரியும். ஆனால் சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 9-ம் வீட்டில் அமர்வதால் இக்காலக்கட்டத்தில் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். தந்தைக்கு வேலைச்சுமை, அலைச்சல், மருத்துவச் செலவுகள், அவருடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும்.


வியாபாரிகளே! மார்ச், மே மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். நவம்பர், டிசம்பர் மாதங்களில் லாபம் இரட்டிப்பாகும். சொந்த இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். போட்டியாளர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அதிரடியாக செயல்படுவீர்கள். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். தள்ளிப் போன வியாபார வாய்ப்புகள் மீண்டும் கிடைக்கும். ஏற்றுமதி, இறக்குமதி, ஷேர், சிமெண்ட், செங்கல், உணவு வகைகளால் பெரும் பணம் சம்பாதிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் பிரச்சனை தந்த பங்குதாரரை மாற்றுவீர்கள்.

உத்யோகஸ்தர்களே! அதிகாரிகளால் பந்தாடப்பட்டீர்களே! செல்வாக்கு இருந்தும் நீங்கள் விரும்பிய இடம் மாற்றம் கிடைக்காமல் திண்டாடினீர்களே! மாற்றம் வரும். மே, டிசம்பர் மாதங்களில் புது சலுகைகள், சம்பள உயர்வும் உண்டு. மேலதிகாரியிடம் இருந்து வந்த கருத்து மோதல்கள் விலகி நட்புறவாடுவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

கன்னிப் பெண்களே! சுப காரியங்கள் ஏற்பாடாகும். எதிர்பார்த்த உயர்கல்வியை தொடர்வீர்கள். காதல் கைகூடும். அழகுக் கலை, கவிதை எழுதுவதில் ஆர்வம் பிறக்கும். மாதவிடாய்க் கோளாறு, தொண்டை வலி, சளித்தொந்தரவு நீங்கும். மாணவர்களே! நினைவாற்றல் பெருகும். சோம்பல் நீங்கி இனி சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். கெட்ட பழக்கங்களிலிருந்தும், கெட்ட நண்பர்களின் சகவாசங்களிலிருந்தும் விடுபடுவீர்கள். அதிக மதிப்பெண் பெறுவீர்கள்.

கலைத்துறையினர்களே! அரசால் கவுரவிக்கப்படுவீர்கள். உங்களின் படைப்புகளுக்கு மதிப்பு மரியாதை கூடும்.

இந்தப் புத்தாண்டின் தொடக்கம் உங்களை சிரமப்படுத்தினாலும் மையப் பகுதியும், இறுதிப் பகுதியும் சாதிக்க வைக்கும்.



# கும்பம்

பாசத்தால் அனைவரையும் கட்டிப் போடுபவர்களே! கடமைத் தவறாதவர்களே! காரியத்தில் கண்ணாக இருந்து காய் நகர்த்துபவர்களே!

உங்கள் ராசிநாதன் சனிபகவான் 9-ம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் சாதிக்க வேண்டுமென்ற தன்னம்பிக்கை வரும். குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வீடு கட்ட ப்ளான் அப்ரூவலாகும். தடைப்பட்டிருந்த வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். பணவரவு உண்டு என்றாலும் சேமிக்க முடியாத படி செலவுகளும் இருக்கும். மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் உயர்கல்வி, உத்யோகம் அமையும். நிலுவையிலிருந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உங்களைத் தாழ்த்திப் பேசியவர்கள் திருந்துவார்கள். அயல்நாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். புது வேலை அமையும். ஆனால் தந்தைக்கு நெஞ்சு வலி, அலைச்சல், டென்ஷன் வந்துப் போகும். பிதுர்வழி சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்பது நல்லது. அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவுப் பெருகும். ஆனால் சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 8-ம் வீட்டில் அஷ்டமத்துச் சனியாக அமர்வதால் இக்காலக்கட்டத்தில் வீண் விரையம், செலவு, ஏமாற்றம், பொருள் இழப்பு, மறைமுக அவமானம், தாழ்வுமனப்பான்மை வந்துச் செல்லும்.

16.5.2012 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 3-ம் வீட்டில் நிற்பதால் கடினமாக உழைத்து இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள். சுபச் செலவுகளும், பயணங்களும் அதிகரிக்கும். ஆனால் எதிர்பார்த்த வகைகளில் பணம் வரும். திருமணம், சீமந்தம் போன்ற அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக் கட்டும். வெளிநாடு செல்வீர்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். மகனுக்கு பல இடத்தில் வரன் பார்த்தும் நமக்கு ஏற்ற சம்பந்தம் இல்லையே என வருந்தினீர்களே! இனி நல்ல மணப்பெண் அமைவார். மகளின் கூடா நட்பு விலகும். லேசான தலை சுற்றல், சலிப்பு, முன்கோபம், சில காரியங்களில் தடைகள் வந்துச் செல்லும். உறவினர்கள் சிலர் நன்றி மறந்து பேசுவார்கள். பூர்வீகச் சொத்தில் இருந்து வந்த வில்லங்கம் விலகும். அதிக வட்டிக்கு வாங்கிய கடனை போராடி பைசல் செய்வீர்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் சிலர் உங்களுக்கு உதவ முன் வருவார்கள். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 4-ம் வீட்டில் அமர்கிறார். எனவே மனஉளைச்சல், மறைமுக எதிர்ப்பு, வீண் விமர்சனம், மூட்டு வலி, சிறுசிறு அவமானங்கள் வரக்கூடும். எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். சிலர் வீடு மாற வேண்டிய நிர்பந்தம் உண்டாகும். கடன் தொந்தரவுகள் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் சிலர் உங்களை தவறானப் போக்கிற்கு தூண்டுவார்கள். வாகனத்தில் செல்லும் போதும், சாலையை கடக்கும் போதும் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களுடன் உரசல்கள் வரும். வழக்கு சம்பந்தமான விஷயங்களில் பின்னடைவு ஏற்படும்.

வருடம் தொடக்கத்திலிருந்து 22.6.2012 வரை 7-ல் நிற்கும் செவ்வாயின் நேரடி பார்வை உங்கள் மீது விழுவதால் மனைவிக்கு மாதவிடாய் கோளாறு, கர்ப்பை வலி வந்து நீங்கும். பழம், காய், கீரைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள். உடல் உஷ்ணம் அதிகமாகும். உணவில் கட்டுப்பாடு அவசியம். எடுத்த வேலையை முடிக்க முடியாமல் தடுமாறுவீர்கள். மற்றவர்களின் தவறான போக்கை நினைத்து அவ்வப்போது வருந்துவீர்கள். யாருக்கும் காரெண்டர் கையெழுத்திட வேண்டாம். 23.6.2012-க்கு பின்னர் செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் வெளிவட்டாரத்தில் உதவியுண்டு. ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். ஒரு சொத்தை விற்று பழைய சிக்கல்களை தீர்ப்பீர்கள். சகோதரங்கள் உங்களை தாமதமாகப் புரிந்துக் கொள்வார்கள்.

வருடம் பிறக்கும் போது 4-ம் வீட்டில் கேது நிற்பதால் முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் போது ஒருமுறைக்கு, பலமுறை யோசித்து கையெழுத்திடுவது நல்லது. தாயாருக்கு மருத்துவச் செலவுகள்,வீண் வாக்குவாதங்கள் வந்து போகும். தாய்வழி உறவினர்களிடம் கருத்துவேறுபாடுகள் வெடிக்கும். வீடு கட்ட தேவைப்படும் பணத்தை கையில் வைத்துக் கொண்டு, வீடு கட்ட தொடங்குவது நல்லது. 10-ம் வீட்டில் ராகு அமர்ந்திருப்பதால் வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்கள் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் உதவியும் உண்டு. வேலைச்சுமை அதிகரிக்கும். வீண்பழியும் வரக்கூடும். 1.12.2012 முதல் உங்கள் ராசிக்கு 3-ல் கேதுவும், 9-ல் ராகுவும் நுழைவதால் எதிலும் ஆர்வம் பிறக்கும். தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தில் மற்றவர்கள் மீதிருந்த சந்தேகங்கள் நீங்கும். ஆனால் தந்தையாரின் உடல் நிலை பாதிக்கும். அவருடன் வீண் விவாதங்கள் வெடிக்கும்.

வியாபாரிகளே! பெரிய அளவில் முதலீடுகள் செய்ய வேண்டாம். ஏப்ரல், மே மாதங்களில் பாக்கிகள் வசூலாகும். புதுத் தொடர்பு கிடைக்கும். வேலையாட்களால் மறைமுகப் பிரச்சனைகள் வந்து நீங்கும். ஜீன் மாதத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உணவு, மருந்து, இரும்பு, பிளாஸ்டிக் வகைகளால் ஆதாயம் பெருகும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் அரசால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் தொந்தரவு கொடுத்தாலும் நிதானத்தை தவறவிடாதீர்கள்.

உத்யோகஸ்தர்களே! வேலைச்சுமை அதிகமாகும். மேலதிகாரி உங்களை தவறாகப் புரிந்துக் கொள்வார். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதற்கு முன்பாக நிதானிப்பது நல்லது. சட்டத்திற்கு புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம். மே, ஜீன் மாதங்களில் வேற்றுநாட்டு நிறுவனங்கள் மூலம் புது வாய்ப்புகள் வரும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் சம்பளம், சலுகைக் கூடும். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

கன்னிப்பெண்களே! காதலில் ஏமாற வேண்டாம். கல்யாணம் தள்ளிப் போய் முடியும். பெற்றோரின் ஆலோசனையின்றி எந்த முடிவும் எடுக்க வேண்டாம். வேனல் கட்டி, முகப்பரு, தூக்கமின்மை வந்து நீங்கும். மாணவர்களே! அதிகாலையில் எழுந்து படிப்பதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். வகுப்பறையில் வீண் அரட்டை வேண்டாம். தெரியாதவற்றை ஆசிரியரிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

கலைத்துறையினர்களே! கிடைக்கிற வாய்ப்பு சின்னதாக, சாதாரணமானதாக இருந்தாலும் பயன்படுத்திக் கொள்வது நல்லது. அவ்வப்போது உங்களைப் பற்றிய கிசுகிசுக்கள் வரும்.

இந்தப் புத்தாண்டு அனுபவ அறிவை பயன்படுத்தி வெற்றி பெற வைப்பதுடன் வாழ்வின் நெளிவு, சுளிவுகளையும் கற்றுத் தரும்.



# மீனம்

அனைத்தையும் அறிந்து வைத்திருக்கும் நீங்கள், தனக்கென ஒரு பிரச்னை வந்தால் தடுமாறுவீர்கள்.

உங்களுக்கு லாப வீட்டில் சுக்ரன் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் அடுத்தடுத்து நல்லது நடக்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். பழைய நகைகளை விற்று புது டிசைனில் ஆபரணங்கள் வாங்குவீர்கள். கல்யாண தடைகள் நீங்கும். நண்பர்கள், உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். ஷேர் மூலம் பணம் வரும். மனைவிவழியில் இருந்த பிணக்குகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வழக்கு சாதகமாகும். உங்கள் ராசியிலேயே இந்தாண்டு பிறப்பதால் மாறுபட்ட அணுகுமுறையால் பழைய சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள். ஆனால் ஆரோக்யத்தில் அதிக அக்கறை காட்டுங்கள். அவ்வப்போது சர்க்கரை, கொழுப்பு அளவை பரிசோதித்துக் கொள்வது நல்லது. திட்டமிடாத வெளியூர் பயணங்கள் அதிகரிக்கும்.

16.5.2012 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 2-ம் வீட்டில் தொடர்வதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆனால் செலவுகள் அடுத்தடுத்து இருக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உறவினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். கோவில் கோவிலாக அலைந்தும் நமக்கு ஒரு வாரிசு கூட இல்லையே என வருந்திய தம்பதியர்களுக்கு குழந்தைபாக்யம் உண்டாகும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலையை உணர்வார்கள். மகளின் கல்யாணத்தை ஊரே மெச்சும்படி நடத்துவீர்கள். மகனுக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலைக் கிடைக்கும். எதிரும், புதிருமாக பேசிக் கொண்டிருந்த உறவினர்கள் தன் தவறை உணர்வார்கள். வெளிமாநில புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். மூத்த சகோதரிக்கு இருந்த பிரச்சனைகள் நீங்கும். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். நவீன ரக வாகனம் வாங்குவீர்கள். நிலுவையில் இருந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். ஆனால் 17.5.2012 முதல் குருபகவான் உங்கள் ராசிக்கு 3-ம் வீட்டில் அமர்வதால் சில காரியங்களை முயன்று தவறி முடிக்க வேண்டி வரும். தைரியம் கூடும். எதிர்ப்புகள் அடங்கும். என்றாலும் ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். புதிதாக ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாத அளவிற்கு வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். இளைய சகோதர வகையில் இருந்த மனத்தாங்கல் நீங்கும். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். வசதி, செல்வாக்குடன் உள்ள தவறானவர்களுடன் நட்புறவாட வேண்டாம்.

செவ்வாய் வருடம் ஆரம்பிக்கும் போதிலிருந்து 22.6.2012 வரை 6-ம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் தொட்டது துலங்கும். எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும். பிரபலங்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வீடு, மனை வாங்குவீர்கள். வெளிநாடு சென்று வருவீர்கள். சகோதரங்கள் பாசமழைப் பொழிவார்கள். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். அரசாங்கத்தாலும், அரசியல்வாதிகளாலும் ஆதாயம் உண்டு. தாய்வழியில் மதிப்பு, மரியாதைக் கூடும். கமிஷன் வகைகளால் லாபம் அடைவீர்கள். கடனாகவும், கைமாற்றாகவும் காசு புரட்டி புது வீடு கட்டி குடிப்புகுவீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும்.

வருடம் பிறக்கும் போது 3-ம் வீட்டில் கேது நிற்பதால் திடீர் பணவரவு உண்டு. மூத்த சகோதரர் உதவுவார். பூர்வீகச் சொத்தை மாற்றியமைப்பீர்கள். கைம்மாற்றாக வாங்கி இருந்த கடனைப் பைசல் செய்வீர்கள். பிதுர் வழிச் சொத்தை அடைவதில் இருந்த தடைகள் விலகும். எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். ஷேர் மூலம் பணம் வரும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். 9-ம் வீட்டில் ராகுவும் அமர்ந்திருப்பதால் தந்தையாருக்கு மருத்துவச் செலவு அதிகரிக்கும். சித்தர்கள்,ஆன்மீகவாதிகளின் ஆசி கிட்டும். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். 1.12.2012 முதல் உங்கள் ராசி 2-ல் கேதுவும், 8-ல் ராகுவும் நுழைவதால் பேச்சில் கடுமை காட்டாதீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். நண்பர்களால் வீண் அலைச்சல், மன உளைச்சல் வரக்கூடும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். வாகனத்தை கவனமாக இயக்குங்கள்.

சனிபகவான் ராசிக்கு 8-ல் அமர்ந்து அஷ்டமத்துச் சனியாக தொடர்வதால் முன்கோபம், படபடப்பு, சிறு சிறு ஏமாற்றம், வீண் பழி வந்துச் செல்லும். மனதில் இனம்புரியாத பயம் வந்துப் போகும். குடும்பத்தில் அமைதியில்லையே என புலம்புவீர்கள். பண விஷயத்தில் கறாராக இருங்கள். திடீர் நண்பர்களை வீட்டிற்குள் அழைத்து வர வேண்டாம். நெருங்கியவர்களாக இருந்தாலும் குடும்ப அந்தரங்க விஷயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். முன்யோசனை இல்லாமல் முக்கிய ஆவணங்களில் கையெழுத்திட வேண்டாம். அரசு காரியங்கள் இழுபறியாகும். யோகா, தியானத்தில் ஈடுபடுவது நல்லது. சனிபகவான் வக்ரமாகி 26.3.2012 முதல் 11.9.2012 வரை உங்கள் ராசிக்கு 7-ம் வீட்டில் அமர்வதால் இக்காலக்கட்டத்தில் மனைவியுடன் வாக்குவாதம், வீண் சந்தேகம், விரக்தி, சோர்வு, களைப்பு வந்து நீங்கும்.

வியாபாரிகளே! மே, ஜீன் மாதங்களில் கணிசமாக லாபம் உயரும். வேலையாட்களிடம் தொழில் சம்பந்தப்பட்ட ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். நவம்பர், டிசம்பர் மாதங்களில் புது ஏஜென்சி எடுப்பீர்கள். வாடிக்கையாளர்களை கவர சில சலுகைகளை அறிவிப்பீர்கள். பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் உங்களை கோபப்படுத்தும்படி பேசினாலும், அவசரப்பட்டு வார்த்தைகளை விட வேண்டாம். ஹோட்டல், கட்டிட பொருட்கள், கமிஷன், ரியல் எஸ்டேட் வகைகளால் ஆதாயமடைவீர்கள்.

உத்யோகஸ்தர்களே! உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். விரும்பத்தாக இடமாற்றம் உண்டு. ஜனவரி, பிப்ரவரி, மே, அக்டோபர், டிசம்பர் மாதங்களில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். சம்பளம் உயரும். சக ஊழியர்கள் குறை கூறும் அளவிற்கு நடந்து கொள்ளாதீர்கள்.

கன்னிப் பெண்களே! புதிதாக அறிமுகமாகுபவர்களை நம்ப வேண்டாம். மனக்குழப்பம் வந்து நீங்கும். பெற்றோரை வெறுக்க வேண்டாம். எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலையும் கிடைக்கும். தூக்கமின்மை, அடிவயிற்றில் வலி வந்து நீங்கும். வருட முற்பகுதியில் திருமணம் முடியும். மாணவர்களே! காலநேரத்தை வீணடிக்காமல் பாடத்தில் கவனம் செலுத்துங்கள். வகுப்பறையில் கேள்வி கேட்க தயக்கம் வேண்டாம்.

கலைத்துறையினர்களே! உங்கள் புகழ் கூடும். ஆனால் கையில் காசு தங்காது.

இந்தப் புத்தாண்டு முற்பகுதியில் திடீர் பணவரவு, கௌரவத்தை தந்தாலும் மையப் பகுதியிலிருந்து செலவுகளையும், அலைச்சலையும் தரும்.



சைவ சமயம் தொன்மை வாய்ந்தது. சிவனை முதன் முதல் தெய்வமாக கொண்டது. நாளல் பேர் சொல்லுக்கு ஏற்றபடி வாழ்க என்று சொல்கிறார்கள் அவர்கள்தான் சமயம் குரவர்கள். இந்த நல்வருடம் பல அற்புதங்களை செய்து காட்டினர் அந்த தேவாரங்கள் நூல்கள் தினமும் பாடினால் துன்பம் வர விலகும் அந்த வகையில் மாத ஒரு தேவாரம் இடம் பெறுகிறது படித்து பயனடையுங்கள்.

-ஆசிரியர்

## எங்களை வாழவைக்கும் தேவார திருமுறைகள் அருள் நிறைந்தவை

*1. தில்லைச் சிற்றம்பலவன் திருவருள் பெற்று, என்றும் இன்பம் பெருக, செல்வ வாழ்வு வாழ ஓத வேண்டிய பதிகம்.*

*ஆசிரியர் : திருஞானசம்பந்தர்,*
*பண் : குறிஞ்சி*
*இராகம் : அரிகாம்போதி,*
*தலம் : கோயில் (சிதம்பரம்)*

### திருச்சிற்றம்பலம்

சுற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

பறப்பைப் படுத்து எங்கும்பசு வேட்டு எரிஓம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின் தாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே.

மையார் ஒண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையால் பந்துஓச்சுங் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தான் உலகேத்தச்
செய்யான் உறைகோயில் சிற்றம் பலந்தானே.

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர் தீண்டப்
பிறைவந்திறைதாக்கும் பேரம் பலம் தில்லைச
சிறைவண்டு அறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே.

செல்வ நெடுமாடம் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
சுருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே.

அலையார் புனல்சூடி ஆகத் தொருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகுஏத்தச்
சிலையால் எயிலெய்தான் சிற்றம் பலம்தன்னைத்
தலையால் வங்குவார் தலையா னார்களே.

கூர்வாள் அரக்கன்தன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலம்மேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே.

கோணா கணையானும் குளிர்தா மரையானும்
காணார் கழல் ஏத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்ஏத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே.

பட்டைத் துவராடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர்வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே.

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே.

சோ. சிவபாதசுந்தரம் அவர்களின்
சேக்கிழார் அடிச்சுவடிலிருந்து

# தில்லை தரிசனம்

சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருவதிகைக்குப் பக்கத்திலுள்ள சித்தவடமடத்தில் நாம் சந்தித்தபின் அவர் தில்லையை நோக்கிச் சென்றார். என்று சொல்லியிருந்தோம். சேக்கிழார் தரும் வரலாற்றுப்படி அங்கே தில்லையில் விசேஷமாக எந்த நிகழ்ச்சியும் நிகழவில்லை. தில்லையிலுள்ள நான்கு வாயில்களில் வடக்கு வாயில் வழியாக அவர் உள்ளே சென்று, தில்லையம்பலத்தானை வணங்கிவிட்டுத் தெற்கு வாயில் வழியாக புறப்பட்டு வீதி வலம் வரும்போது, ''திருவாரூருக்கு வா'' என்று ஓர் அசரீரி கேட்டதாம். திருவாரூர் சுந்தரரின் தாயார் இசைஞானியார் பிறந்த ஊர். அன்றியும் அவர் வாழ்க்கையில் நிகழவிருக்கும் முக்கிய சம்பவங்களுக்கெல்லாம் திருவாரூர் நிலைக்களமாயிருக்கப் போவதால் அவர் முதலில் திருவாரூருக்குப் போவது பொருத்தமென்றுதான் இந்த அழைப்பு வந்தது போலும்.

தில்லையைத் தரிசித்த சுந்தரமூர்த்தி அந்தத் தலத்திலிருந்தே இறைவனைத் துதித்துப் பாடியதாக ஒரு பதிகமாவது தேவாரத்தில் இல்லாதது ஆச்சரியம்தான். சேக்கிழார் தமது பெரியபுராணத்தில சுந்தரர் இங்கு இரண்டு பதிகங்கள் பாடினார் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அவை தேவாரத் தொகுப்பில் காணப்படவில்லை. செல்லரித்துவிட்ட ஏடுகளில் ஒருவேளை அவை மறைந்து போயிருக்கலாம். ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்றே திருத்தொண்டத் தொகையை ஆரம்பித்து, முதலிலே வணக்கம் செய்த தில்லையை எப்படிப் பாடாமலிருக்க முடியும்? இப்போதுள்ள தேவாரத் தொகுப்பில் கோயில் என்ற தலைப்பில் 'மடித்தாடும்' என்ற பதிகத்தைச் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பதிகம் பேரூரில் வைத்துப் பாடியதாகச் சேக்கிழார், ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணத்தில் தெளிவாகக் கூறுகிறார். சுந்தரர் தமது யாத்திரையில் பல தடவை தில்லைக்கு வந்திருக்கிறார் என்று தெரிகிறது. அவர் அங்கே பதிகம் பாடினாரோ அல்லது பாடவில்லையோ, இப்போது அவர் மிக அவசரமாகத் திருவாரூர் போக வேண்டியிருக்கிறது. ஆகையால் அவரைத் தடைசெய்யாமல் அங்கே போகவிட்டு, நாம் சிதம்பர ஷேத்திரத்தைச் சுற்றிப் பார்த்து அந்தத் தலத்தோடு தொடர்பு கொண்ட திருநீலகண்ட நாயனார், கணம்புல்ல நாயனார், திருநாளைப் போவார் என்ற நந்தனார் முதலியவர்களைச் சந்தித்துவிட்டு அப்பால் நமது யாத்திரையைத் தொடருவோம்.

பொழுது சாய்ந்து இருட்டிவிட்டது நாங்கள் சிதம்பரம் போய்ச் சேரும்போது. எத்தனை தடவைதான் இந்த பெரிய கோயிலைரத் தரிசித்தாலும் முற்றும் முழுவதும் அதைப் புரிந்துகொள்ள முடியாது. ஆகையால், கோயில் வீதியிலேயே நெடுங்காலமாக வசிக்கும் ஒரு பழைய இலக்கிய நண்பர் வீட்டுக்குச் சென்று அவர் மூலமாக மறுநாட்காலை கோயில் வட்டத்தைப் பார்க்கலாம் என்ற நோக்கத்தோடு அந்த நண்பரைச் சந்தித்தோம். ஆனால் அந்த நண்பர், நம்மைவிட அதிகமாகப் பழக்கமுள்ள, கோயிலுடன் தொடர்புள்ள நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் மூலமாகப் பல தகவல்களை அறியலாம் என்று சொல்லித் சென்றார். அங்கே நான் நேருக்கு நேர் நண்பர் சம்பந்தம் பிள்ளையைத்தான்! சிதம்பரத்திலே மிகவும் செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் பெரியபுராணத்தைப் பாராயணம் செய்பவர். எங்கள் யாத்திரையின் நோக்கத்தைக் கேட்டவுடன் அளவற்ற மகிழ்ச்சியோடு உபசரித்தார். மறுநாள்காலை தமது வீட்டிலேயே பலகாரம் சாப்பிட்டுவிட்டு, சிதம்பரம் கோயிலைச் சுற்றிப் பார்த்து, மற்றும் இடங்களுக்கும் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தார்.

காலை ஆறு மணிக்கெல்லாம் சம்பந்தபிள்ளை வீட்டுக்குப் போனோம். அவரும் அவர்

குடும்பத்தினரும் உபசரித்த பாங்கை இங்கு சொல்லாமலிருக்க முடியாது. உப்புமா, சர்க்கரை, இட்டிலி, நெய், துவையல், மிளகாய்ப் பொடி, நல்லெண்ணெய், தயிர், வாழைப் பழம், காப்பி, இத்தனை வரிசையுடன் அவரது பெண்களின் இன்முகமும், சம்பந்தம் பிள்ளையின் பெரியபுராணப் பேச்சும் மறக்க முடியாத அனுபவம். எமது யாத்திரையில் சிற்சில சம்பவங்கள் பிரயாணத்தின் அலுப்பை மறக்கச் செய்து, இலக்கியத்தில் நிலைத்து நிற்க வேண்டிய அனுபவங்களாகிவிட்டன. சிதம்பரத்தில் இந்த அனுபவமும் ஒன்று.

நண்பர் சம்பந்தத்தின் மீது சிதம்பரம் கோயில் தீஷிதர்கள் மிகுந்த அபிமானமுள்ளவர்க்ள என்பதைத் தெரிந்து கொண்டோம். முதலில் அவர் எங்களை அழைத்துக்கொண்டு போய் கோயில் நிர்வாகக் குழுவின் செயலாளராகயிருந்த ராஜாமணி தீஷிதரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். இளம் வயது. கவர்ச்சிகரமான தோற்றம். விவேகி. இவர் தில்லை வாழந்தணர் மூவாயிரவரில் ஒருவர். ''இன்னொரு காலத்தில் மூவாயிரவர் என்ற கணக்கு சரியாயிருந்திருக்கும். ஆனல், இன்று நாங்கள் சுமார் இருநூறு குடும்பத்தினர் தான் கோயிலோடு சம்பந்தப்பட்டிருக்கிறோம். விவாகமான ஆண்கள் எல்லோருக்கும் கோயிலில் உரிமையுண்டு. இந்தக் காலத்தில் சிலர் ஆங்கிலம் படித்து வெளியூர்களில் போய் உத்தியோகம் பார்ப்பதால் அந்த உரிமையை இழந்து விடுகிறார்கள்'' என்றார் ராஜாமணி தீஷிதர்.

இந்தத் தில்லை மூவாயிரவர் எப்பொழுது எங்கிருந்து வந்தார்கள் என்று சொல்ல வரலாறு காணப்படவில்லை. சோழர் காலத்திலே ராஜராஜ சோழன் சில சிவாசாரியர்களை வடக்கேயிருந்து கொண்டுவந்து பல கோயில்களில் ஆகம விதிப்படி பூஜை செய்ய நியமித்தான் என்று தெரிகிறது. அப்படி நியமிக்கப்பட்டவர்களை இவர்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில், ராஜராஜனுக்கு முன்னே எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் இவர்களை, ''முட்டாத முச்சந்தி மூவாயிரவர்'' என்று ஒரு தேவாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் சமகாலத்தவரான திருமங்கையாழ்வாரும், ''மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க'' என்று தில்லை வேதியரைக் குறிப்பிடுகிறார். ஆனால் இவர்களுக்கு முன்பு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசர் இந்த அந்தணர்களை மூவாயிரவர் என்று சொல்லவில்லை. சம்பந்தரும் மூவாயிரம் என்ற எண்ணிக்கை குறிப்பிடாமல், ''கற்றாங்கு எரியோம்பும் சிறப்பர் வாழ் தில்லை'' என்றும் அக்கினி வளர்த்து வேள்வி செய்யும் வேதியர்களைக் குறிப்பிடுகிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் புராதன கோயில் கட்டடங்களையும் சைவ மரபையும் ஆராய்ந்த ஒரு பேராசிரியர் சிதம்பரத்தைப் பற்றிய தமது ஆராய்ச்சியில் குறிப்பிடும் சில தகவல்கள் பொருத்தமாயிருப்பதைக் காணலாம்.

சிதம்பரம் கனகசபையைப் பிரதக்ஷணம் வருபவர்கள் ஒரு விசித்திரமான உண்மையைச் சாதாரணமாய் கவனிக்க மாட்டார்கள். கூர்ந்து நோக்கினால் தெரியும். நடராஜப்பெருமான் சந்நிதியில் நின்று வழிபட்ட பின் கனகசபையை வலம் வந்தால் முதலில் திருக்களிற்றுப் படி எதிர்ப்படும். அந்த இடத்திலிருந்து பார்த்தால் மேடையில் நடராஜ மூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடத்துக்குப் பின்னால் சுவர் தெரியும். திருக்களிற்றுப் படியைத் தாண்டி வலம் வரும்போது மேற்சொன்ன சுவர் சாதாரண அகலமுள்ள சுவராயிருந்தால், இரண்டடி அல்லது மூன்றடி தாண்டியவுடன் வடக்குப் பிராகாரத்துக்கு நாம் வந்துவிடலாம். அப்படியில்லாமல், சுவர் ஆறு அல்லது ஏழு அடி அகலமாயிருப்பது போல் தெரிகிறது. ஆகையால், அங்கிருப்பது வெறும் சுவரல்ல, நான்கு புறமும் மூடப்பட்ட ஒரு அறை என்பது நமது ஆராய்ச்சி நண்பரின் ஊகம்.

பல்லவர் காலத்திலே சைவ நெறியைப் பரப்பியவர்கள் பாசுபதத் துறவிகள் என்றும் பசுபதி வழிபாட்டினர் என்றும் பல்லவ சரித்திரத்தைப் பார்க்கும்போது தெரிகிறது. இவர்களின் சிலர் சிதம்பரத்தில் குடியேறி அங்கிருந்த கோயிலில் யாகம் முதலிய செயல்களில் ஈடுபட்டிருந்திருக்கலாம். ''பசுவேட்டு எரியோம்பும் சிறப்பர்'' என்று ஞானசம்பந்தர் சுட்டிக் காட்டுபவர்கள் இவர்களா யிருக்கலாம். இவர்களே பெருகி மூவாயிரவர் என்ற குழுவாக ஏற்பட்டிருக்கக்கூடும். பிற்காலத்தில் சோழ மன்னர்கள் குடியேற்றிய வைதிக பிராமணர் கலப்பால் பாசுபதர் தில்லை மூவாயிர தீக்ஷிதர்களாயிருக்கலாம் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

தீக்ஷிதர் வரலாறு எப்படியாயினும், சிதம்பரம் கோயில் உரிமையும் பரிபாலனமும் இந்தத் தில்லை மூவாயிரவர் என்ற தீக்ஷிதர் கையில்தான் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் வேறு எந்தக் கோயிலும் இந்த மாதிரியான உரிமையைப் பெறவில்லை. முதலாம் ராஜராஜன் காலத்தில், கி.பி. பத்தாம் நூற்றாண்டிலே, கோயில் சொத்துக்கள் வாங்குவதும் கொடுப்பதும், மற்றும் சாசனங்கள் எழுதப்படுவதும், இறைவனின் பிரதிநிதியான ''திருப்புலியூர் சண்டேசுவர தேவனார்'' பெயரிலேயே நடந்து வந்தன. பன்னிரண்டாம் நூற்றாண்டில், விக்கிரமசோழன் காலத்தில், ஓர்

உரிமைப் பிரச்சினை எழுந்து உட்பூசல்கள் ஏற்பட்டன. இந்த வழக்கில் அரசன் தலையிட்டு தில்லைக் கோயில் நடவடிக்கைகளும் கண்காணிப்பும் ''பொது தீக்ஷிதர்'' குழுவின் பெயரில் இருக்க வேண்டுமென்று தீர்ப்பளித்து, அதற்கென சில விதிகளும் ஏற்படுத்திவைத்தான். அந்த விதிகளே இன்றும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. கோயில் நிர்வாகம் ஒன்பது பேர் கொண்ட ஒரு சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொது என்பது மன்றம் அல்லது சபை. ஆகவே இவர்களை 'பொது தீக்ஷிதர்' என்று சொல்வார்கள். ந்தக் காரியமானாலும் இவர்களே முடிவு செய்ய வேண்டும் ஆனால் இவர்கள் கூடும் கூட்டங்களில் தலைமை வகிப்பவர் தீக்ஷிதரல்லர், ஒரு பண்டாரம். இந்தப் பண்டாரத்தின் மூலமாகத்தான் சண்டேசுரருக்கு இணையாக எல்லாத் தீர்ப்புகளும் வழங்கப்படும்.

சிதம்பரம் கோயில் தொகுப்பு ஐந்து சந்நிதிகளைக் கொண்டு. இந்த ஐந்துக்கும் நான்கு நான்கு பேராக இருபது பேர் பூஜை முறை வைத்துக் கொள்வார்கள். இருப்பது நாட்களுக்கு ஒரு முறை இடம் மாறுவார்கள். ஆனால் நடராஜர் சந்நிதியில் பூஜை செய்ய எல்லாரும் தகுதி பெற்றவர்களல்ல என்றும், ''பூஜை எடுத்தவர்'' என்ற அந்தஸ்தைப் பெற்ற மூன்று நான்கு பேர்தான் நடராஜ மூர்த்தியைத் தொட உரிமையுள்ளவர்கள் என்றும் ராஜாமணி தீக்ஷிதர் விளக்கினார்.

தில்லைவாழந்தணர்களைப் பற்றி இப்படியான செய்திகளையெல்லாம் ராஜாமணி தீக்ஷிதரோடு பேசிக்கொண்டிருந்தபின் அவருடைய அனுமதியோடு சம்பந்தம்பிள்ளை எங்களை உள்ளே அழைத்துச் சென்று பொன் வேய்ந்த கனகசபை முதலிய முக்கியமான இடங்களைப் புகைப்படம் பிடிக்க உதவினார். அதன் பின்சிற்பையில் ஸ்படிக லிங்க அபிஷேக தரிசனமும், நடராஜர் திருவுருவக் காட்சியும், பின்னால் சிதம்பர ரகசியமாய் ஒளிந்திருக்கும் ஆகாச லிங்கக் கற்பனைக் காட்சியும் கிடைக்கப் பெற்றோம்.

இந்த நடராஜ வடிவத்தை யார் எப்பொழுது வடித்துத் தந்தாரோ சரித்திரம் இல்லை. ஆனால் இப்போது நாம் நினைத்துப் பார்த்தால் இவ்வளவு பெரிய தத்துவத்தைச் சிற்ப வடிவத்தில் வடிக்கக் கருத்து வழங்கிய மேதையையும், அக்கருத்துக் கியைய உருவம் வார்த்த சிற்பியையும் தொழ வேண்டும் போல் இருக்கிறது. இன்று நாம் காணும் நடராஜ வடிவம் பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் உருப்பெற்று வழக்கில் வந்தது. அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நடராஜ வடிவம் சிலையிலிருந்தது என்பதைக் காரைக்காலம்மையாரின் வாயிலாகவும் திருநாவுக்கரசு நாயானார் தேவாரத்திலும் காண்கிறோம்.

நாவுக்கரசரை நாம் பழையபடி ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. திருவதிகையிலிருந்து புறப்பட்ட இவர் சில தலங்களைத் தரிசித்த பின் சிதம்பரத்துக்கு வந்தார். சுந்தரமூர்த்தி வடக்கு வாயிலால் உட்புகுந்தார். என்று சொல்லும் சேக்கிழார், நாவுக்கரசர் மேற்கு வாயிலால் வந்தார் என்று சொல்லி வைக்கிறார். இதுபோல், சம்பந்தர் தெற்கு வாயிலாலும், மாணிக்கவாசகர் கிழக்கு வாயிலாலும் உள்ளே சென்று வணங்கினார் என்று நால்வருக்கும் நான்கு வாயில்களையும் ஏற்றிச் சொல்வது கர்ணபரம்பரை. நாவுக்கரசர் தில்லைக்கு வந்து இறைவனைத் துதித்துப் பாடிய சில பாசுரங்களில் நடராஜ வடிவத்தின் லட்சணத்தை மிக அற்புதமாக வருணித்துள்ளார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல மேனியில் பால வெண்ணீறும்
இனித்தம் முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே

''எடுத்த பொற்பாதத்துடன் ஆடுகின்ற இந்த வடிவத்தைக் காண வாய்ப்பிருந்தால் மனிதப் பிறவி எடுப்பதும் விரும்பத் தக்கதுதான்'' என்கிறார் அப்பர் சுவாமிகள். நடராஜ தரிசனத்தைக் கண்டுகொண்ட அப்பர் திருஞானசம்பந்தரைத் தேடிச் சீர்காழிக்குப் போகிறார். அவரை நாம் பின்னொரு நாள் அங்கு சந்திப்போம்.

நடராஜ வடிவத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தோ மல்லவா? மிகப் பழைய காலத்திலேயே இறைவனின் கூத்தாடும் நிலையைப் பற்றி யாரோ ஒருவர் கற்பனையில் உதயமாகியிருக்க வேண்டும். வழிவழியாகச் சிற்பிகள் அதற்கு மெருகு கொடுத்து உருப்படுத்தி வந்தார்கள். பத்தாம் நூற்றாண்டுச் சோழ சிற்பியின் கையில் உருவான நடராஜ வடிவம்தான் முழுமை நிறைந்தது. அதற்குப் பிறகு மேலும் அழகு கொடுக்க இடமில்லை என்ற நிறைவு. இந்த வடிவம் பல நூற்றாண்டுகளாகவே நம் முன்னோரால் பக்தியுடன் வழிபாட்டுக்குரிய வடிவமாக மாத்திரம் போற்றப்பட்டு வந்ததல்லாமல் அதிலடங்கிய கலைத் தத்துவத்தை நாம் இந்த கூடியதாயிற்று. இதனை எடுத்து முதன்முதலில் விளக்கிய பெருமை இலங்கைத் தமிழர் ஆனந்த குமாரசுவாமி அவர்களைச் சாரும். இந்தியக் கலையின் தத்துவத்தையும் அழகையும் உலகத்துக்கு எடுத்துக் காட்டியஅந்தக் கலாயோகி, நடராஜ வடிவத்தில் அடங்கிய அழகையும் பொருளையும் ஒரு வெண்பா

மூலமாக எடுத்துக்காட்டி அதற்குச் சிறந்த வியாக்கியானமும் எழுதி, சிவநடனம் என்ற பெயரில் நூல் வெளியிட்டார்.

தோற்றந் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

இது உமாபதி சிவாசாரியார் என்ற அறிஞர் ஒருவர் பாடிய "உண்மை விளக்கம்" என்ற நூலில் உள்ளது. சைவசித்தாந்த நெறியின்படி இறைவன், ஆன்மாக்களைப் பொறுத்தமட்டில், ஐந்து வகைத் தொழில்கள் புரிபவன் என்பது மரபு. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன அந்த ஐந்தொழில்கள். நடராஜ வடிவத்தில் துடி என்ற டமருகம் கொண்ட கை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், அங்கி ஏந்திய கை அழித்தலையும், ஊன்றிய பாதம் ஆன்மாக்களைப் பாசத்திலிருந்து மறைத்தலையும், தூக்கிய பாதம் அருளலையும் காட்டுகின்றன என்பது தத்துவம். சிவ பிரானுக்கு மூன்று வகையான நடனங்கள் கூறப்பட்டுள்ளன. திருக்கயிலாய மலையில் தேவர்கள் நடுவில் ஆடுவது பிரதோஷ நடனம். இது ஊழிக்காலம் முடிய உலகத் தோற்றம் உண்டாக ஆடும் சிருஷ்டி நடனம். இரண்டாவது ஊர்த்துவ தாண்டவம். இது வைரவ அல்லது வீரபத்திர மூர்த்தத்தில் நின்று ஆடுவது. திருவாலங்காட்டில் காளியுடன் ஆடியது இந்த நடனம். தில்லையிலும் ஆடியதாக ஐதிகம் உண்டு. கனகசபைக்கு எதிரிலுள்ள நிருத்தசபையில் காணப்படும் சிற்பம் ஊர்த்துவ தாண்டவம். மூன்றாவது ஆனந்த தாண்டவம். இதுவே சிதம்பரத்தில் சிற்சபையில் நித்தியமாய் நிரந்தரமாய் ஆடிக்கொண்டிருக்கும் அற்புத நடனம். இதைப்பற்றி எத்தனையோ நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. உலகத்தின் பல கலைஞர்கள் தேடிவந்து பார்த்துப் பரவசமடைந்து அதேபோல நகல் உருவங்கள் செய்துகொண்டு செல்கின்றனர். ஒரு சிலர் பழைய சோழ சிற்பிகள் வார்த்து, கோயில்களில் பிரதிஷ்டை செய்த சிலைகளையே திருடிச் சென்று பிறநாட்டாருக்கு விற்கின்றனர். இத்தகைய ஒரு சிலை கும்பகோணத்துக்குப் பக்கத்திலுள்ள சிவபுரம் கோயிலிலிருந்து திருடப்பட்டு அமெரிக்காவில் கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட வரலாற்றை நாம் அறிவோம்!

கனகசபையில் நடராஜப் பெருமான் காட்சி அளிக்க, அவருக்கு எதிர்ப்புறத்தில் கிழக்குப் பார்த்தபடி கிடந்த திருக்கோலத்துடன் காட்சியளிக்கிறார் கோவிந்தராஜப் பெருமாள். இது சிதம்பரத்துக்கு ஓர் அபூர்வ ஏற்பாடு. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்ம பல்லவன் பிரதிஷ்டை செய்து வைத்ததாகத் தெரிகிறது. குலசேகர ஆழ்வாரும் திருமங்கையாழ்வாரும் இந்தக் கோவிந்தராஜப் பெருமாளைப் பாடியிருக்கிறார்கள். அவர்கள் காலத்தில் தில்லை மூவாயிரவரே பெருமாளுக்கும் பூஜை செய்தார்கள். திருமங்கை யாழ்வார் பெரிய திருமொழியில்,

மூவாயிர நான்மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடஞ் சென்று சேர்மின்களே

என்று பாடுகிறார். திருச்சித்திரக்கூடம் என்பதே வைஷ்ணவர்கள் தில்லையை குறிக்கும் பெயர். இந்த கோவிந்தராஜப் பெருமாள் அடிக்கடி பல அவதிக்குள்ளானார் என்று தெரிகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில். இவர் நடராஜர் முன்னிலையில் இருக்கலாகாதென்று சொல்லி சோழமன்னன் இரண்டாம் குலோத்துங்கன் பெருமாள் விக்கிரகத்தைக் கொண்டுபோய் கடலில் போட்டு விட்டான் என்று ஒரு கதையுண்டு. இன்னொரு கர்ண பரம்பரைக் கதையின்படி சித்திரகூடத்தை எவரோ அழித்தபோது இராமானுஜர் பெருமாள் விக்கிர கூடத்தை எவரோ அழித்தபோது இராமானுஜர் பெருமாள் விக்கிரகத்தை எடுத்துச் சென்று கீழைத் திருப்பதியில் பிரதிஷ்டை செய்து வைத்தார் என்று சொல்லப்படுகிறது. பின்னர் பதினாலாம் நூற்றாண்டிலே முகம்மதியப் படைகள் பல கோயில்களை இடித்து அட்டூழியம் செய்தபோது, இவர்களுக்குப் பயந்து பல விக்கிரகங்கள் மறைத்து வைக்கப்பட்டன. செஞ்சியில் ஆண்ட விஜயநகர வீரர்களான கோபண்ணராயனும் கம்பண்ணனும் முஸ்லிம் படைகளை அழித்து அமைதி கண்டபோது, இந்துக் கோயில்கள் திறக்கப்பட்டன. அந்தச் சமயத்தில் கோவிந்தராஜப்பெருமாளையும் சிதம்பரத்தில் பிரதிஷ்டை செய்ய வேதாந்த தேசிகர் ஏற்பாடு செய்துவைத்தார். இதற்குப் பிறகும் பெருமாளுக்கு நிம்மதி ஏற்படவில்லை. மேலும் ஒரு தடவை இடம் மாறியபின் முடிவிலே பதினாறாம் நூற்றாண்டு முதல்தான் இன்று வரையிலும் அவர் நிம்மதியாக அந்த சயனத்தில் வீற்றிருக்கிறார். இதற்கு வழி செய்து வைத்தவர் 1539 இல் ஆண்ட விஜயநகர மன்னர் அச்சுதராயர். நடராஜர் சந்நிதிக்கு எதிரே துவஜஸ்தம்பத்தடியில் நின்றால் ஏக சமயத்தில் தில்லையம்பலத்தானையும் கோவிந்தராஜனையும் வழிபடலாம் ந்த அனுபவத்தை நந்தன் சரித்திரக் கீர்த்தனை பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார்.

தில்லையம்பலத்தானை கோவிந்தராஜனைத்

தெரிசித்துக் கொண்டேனே..

தும்பைப்பூ மாலைகள் தொட்டுக் கொடுப்ப திங்கே

துளசிக் கொழுந்தெடுத்துத் தொட்டுக் கொடுப்ப துங்கே..

என்று இரு கடவுளரையும் விளித்துப் பாடியிருப்பதில் காணலாம்.

இந்த நடராஜ தரிசனத்தின் பின் சம்பந்தம்பிள்ளை தில்லையின் மற்றைய கோயில்களுக்கும் அழைத்துச் சென்றார். எல்லாக் கோயில்களிலும் இறைவன் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருகத்தை மூலஸ்தானம் என்பர். ஆனால் சிதம்பரத்திலும் திருவாரூரிலும் லிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்ட தனிக்கோயிலை திருமூலட்டானம் என்ற சிறப்புப் பெயரால‌ழைப்பர். இவ்விரு தலங்களிலும் முக்கிய வழிபாட்டுக் குரியவர்கள் சிதம்பரத்தில் நடராஜரும், திருவாரூரில் தியாகராஜனரும். ஆகையால் மூலவராக, அருவமாகிய லிங்க வடிவத்தில் இருக்கும் கோயிலை திருமூலட்டானம் என்று வழங்குகின்றனர். சிதம்பரம் திருமூலட்டானத்தருகே உள்ளது சிவகாமி சந்நிதி. இங்கிருந்து நாங்கள் ஆயிரங்கால் மண்டபத்துக்கு வந்தோம்.

இந்த ஆயிரங்கால் மண்டபம்தான் சேக்கிழாரின் பெரியபுராண அரங்கேற்றத்துக்கு உபயோகப்பட்டது என்று சொல்வார்கள். பெரிய புராணம் பிறந்த கதையும் ஒரு ருசிகரமான வரலாறு. திருவாரூரில் அநபாய சோழனின் மந்திரியாயிருந்தவர் சேக்கிழார். அரசன் சமண இலக்கியம் ஒன்றில் ஈடுபாடு கொண்டிருந்ததைக் கண்ட சேக்கிழார், சிவனடியார்களின் வரலாற்றைச் சொல்லிச் சைவத்தின் பெருமையை விளக்கியபோது, அந்த வரலாற்றைக் காவியமாகப்பாடச் சொன்னான் அரசன். அந்த ஆணையை மேற்கொண்டு சேக்கிழார் சிதம்பரம் சபாநாயகரை வந்து வணங்கி, தில்லையம்பல வாணனே ''உலகெலாம்'' என்ற முதல் அடி எடுத்துக் கொடுக்க, ''உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்'' என்ற காப்புச் சொல்லுடன் தொடங்கி பெரியபுராணம் என்ற மகா காவியத்தை எழுதி முடித்தார். அரசனே முன்வந்து பெரியபுராணத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்து சேக்கிழாரையும் பெருமைப்படுத்தினான். இது நடந்தது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில். இந்தச் சம்பவத்தைப் பதினாலாம் நூற்றாண்டில் தில்லையில் வசித்த மகாஞானியாகிய உமாபதி சிவாசாரியார், 'சேக்கிழார் புராணம்' என்ற நூலிலே மிக விரிவாகச் சொல்லியிருக்கிறார்.

உமாபதி சிவாசாரியார் சிதம்பரம் பெற்ற மற்றொரு பேரறிஞர். தில்லைவாழந்தணர்கள் என்ற தீக்ஷிதர்களில் ஒருவரான இவர் அளவுகடந்த இறுமாப்புடனும் கல்விச் செருக்குடனும் வாழ்ந்தவர். ஆடையாபரண வகையுடன் எப்பொழுதும் பல்லக்கிலேதான் பிரயாணம் செய்வார். ஒருநாள் இவர் சிதம்பரம் வீதியொன்றில் சிவிகையில் ஏறிச் செல்லும் போது வழியிலே ஒரு பரதேசி இவரைப் பார்த்து, ''பட்ட கட்டையிற் பகற் குருடு போகுது பாரீர்!'' என்று ஏளனமாகச் சொன்னார். அந்தப் பரதேசி சிதம்பரத்தைச் சார்ந்த திருக்களஞ்சேரியிலிருந்த சைவசித்தாந்த ஞானாசிரியர் மறைஞான சம்பந்த சிவாசாரியார். இவர் இன்னார் என்று உணர்ந்ததும் உமாபதி சிவாசாரியார் உடனே சிவிகையிலிருந்து இறங்கி வந்து, மறைஞான சம்பந்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கி உபதேசம் பெற்றார்.

மறைஞான சம்பந்தர் சகலமும் துறந்த ஞானி. உமாபதியும் தீக்ஷிதர்களுக்குள்ள ஒழுக்கங்களைத் துறந்து தமது குருவுண்ட எச்சில் உணவையே தாமும் உண்டு மெய்ஞ்ஞானம் வரப்பெற்றார். இவர் நடத்தையை வெறுத்த தில்லைவாழந்தணர்கள் உமாபதியைத் தங்கள் குலத்துக்குரியவர் அல்லர் என்று தள்ளி வைத்து விட்டனர். உமாபதி தனிமையில் பக்கத்திலுள்ள கொற்றவன்குடி என்ற பகுதியில் உறைந்து வந்தார். ஒரு நாள் சிதம்பரம் கோயிலில் பிரம்மோற்சவம் ஆரம்பமாகும்போது கொடிமரதில் கொடியேற முடியாமல் தடைப்பட்டது. எல்லோரும் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் அது ஏற மறுத்துவிட்டது. உமாபதியை அழைத்து வாருங்கள் என்று அசரீரி பிறந்ததாகவும், அவர் வந்து தரிசனம் கொடுத்ததும் கொடி தானாகவே ஏறியது என்றும் சொல்வார்கள். அந்தச் சமயத்தில் அவர் பாடியதுதான் ''கொடிக்கவி.'' இது சைவ சித்தாந்த சாஸ்திரம் பதினான்கில் ஒன்று. சைவர்கள் போற்றும் சித்தாந்த சாஸ்திரங்களில் முதல் நூல் சிவஞான போதம். இதற்கு வழிநூல் சிவஞான சித்தியார். இந்தத் தொடரில் உமாபதி சிவாசாரியார் எட்டு நூல்கள் செய்துள்ளார். இந்த நூல்கள் வெளிவந்த பின்னர் சைவசித்தாந்த இலக்கியம் அளவற்ற பெருமதிப்பைப்பெற்றது என்று சொல்வார்கள்.

சிதம்பரத்துக்கு மற்றொரு மதிப்பைக் கொடுக்கும் சம்பவம் தேவார ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு. சிதம்பரம் கோயில் தென்மேற்குப் பிராகாரத்தில் நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. இது தேவார மண்டபம் என்றும் வழங்கப்படும். இங்கேதான் மூவர் தேவாரப் பதிகங்களையும் விக்கிரம சோழனுக்கு மந்திரியாயிருந்த காளிங்கராயன் (பன்னிரண்டாம் நூற்றாண்டு) செப்பேட்டில் எழுதிப் பாதுகாப்பாக வைத்தான் என்று கல்வெட்டுச்

> **தள்ளிப்போடுதல் அல்லது தாமதப்படுத்துதல் என்பது நேரத்தைத்திருடுதல் என்று பொருள். அதுவே வாழ்க்கையின் மிகமோசமான எதிரி.**
>
> **-ஜென்**

சான்றுள்ளது. கி.பி. ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிச்சென்ற பல்லாயிரக் கணக்கான தேவாரப் பாடல்களும் அவ்வப்போது சிலரால் ஏட்டில் எழுதப்பட்டன. அவை செவிவழிப்பாடமாகவும் பூராயணம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஞானசம்பந்தர் வரலாற்றைப் பார்க்கும்போது அவர் பின்னால் சம்பந்த சரணாலயர் என்பவர் எப்போதும் யாத்திரையில் தொடர்ந்து சென்றார் என்றும், சம்பந்தர் அவ்வப்போது திருத்தலங்களில் பதிகம் இயற்றிப் பாடும்போது அதை உடனுக்குடன் சரணாலயர் ஏட்டில் எழுதினார் என்றும் தெரிகிறது. அதே போல்தான் அப்பரும் சுந்தரரும் தல யாத்திரை செய்து தேவாரப் பாடல்களை இயற்றிப் பாடும்போதெல்லாம் அவர்களோடு பின் சென்ற சீடர்கள் சிலர் ஏட்டில் எழுதி வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இப்படியாக எழுதப்பட்ட சில ஏட்டுச் சுவடிகள் அங்கங்கே சேமித்து வைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலானவை அழிந்து போய்விட்டன.

இரண்டு மூன்று நூற்றாண்டுகள் சென்றபின் தமிழ்நாட்டுக் கோயில்களில் திருமுறை பாடுவதைக் கட்டாய நியதியாக்க வேண்டுமென்று விரும்பிய ராஜராஜ சோழன், தேவார ஏடுகள் கிடைக்கப் பெறாமல் மனம் நொந்தான். எங்கும் தேடியும் கிடைக்கவில்லை. அந்தச் சமயத்தில் சிதம்பரத்துக்கு மேற்கேயுள்ள திருநாரையூர் என்ற தலத்தில் ஒரு சிறு பிள்ளை, நம்பியாண்டார் நம்பி என்ற பெயரில், தாம் வணங்கும் விநாயகரிடம் கேட்டுச் சொல்லுமாறு வேண்டினான். திருவாருளால் நம்பி அறிந்து, சிதம்பரம் கோயிலுள், வடமேற்குப் பிராகாரத்து மூலையில் ஓர் அறை பூட்டப்பட்டிருக்கிறதென்றும் அதனுள்தான் தேவார ஏடுகள் வைக்கப்பட்டுள்ளன என்றும் சொன்னார். அந்தச் செய்தியைக் கேட்ட ராஜராஜன் சிதம்பரத்துக்கு வந்து விசாரித்தபோது தீக்ஷிதர்கள் அந்த அறைக் கதவைத் திறக்க மறுத்துவிட்டார்கள். கதவின் பூட்டிலே நாயனார் மூவரது முத்திரை பொறிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர்கள் நேரில் வந்து அனுமதி கொடுத்தாலல்லாது திறக்க முடியாதென்றும் சொன்னார்கள். அரசன் உடனே நாயனார் மூவரின் விக்கிரகங்களை அலங்கரித்து எழுந்தருளச் செய்து தேவார ஏடுகள் பூட்டியிருந்த அறையின் முன் நிறுத்தி, தீக்ஷிதர்களிடம், ''நாயன்மார்களே நேரில் இங்கே எழுந்தருளி விட்டனர். இனி நீங்கள் அறையைத் திறக்கலாம்'' என்றான்.

தில்லைவாழந்தணர்கள் கதவுகளைத் திறந்துவிட்டனர். உள்ளே ஒரே கரையான் புற்றாயிருந்தது. அதை அகற்றிப் பார்க்கும்போது பல ஏடுகள் தென்பட்டன. அவற்றின் மீது எண்ணெயைச் சொரிந்து ஏடுகளை உடையாமல் வெளியே எடுத்து, செல்லரித்துப் போனவற்றை நீக்கி, எஞ்சிய ஏடுகளிலுள்ள தேவாரப் பதிகங்களை நம்பியாண்டார் நம்பியே ஒரு வரலாற்று ஒழுங்கின்படி திருமுறைகள் என்ற பெயரில் ஏழு திருமுறைகளாக வகுத்துக் கொடுத்தார் என்பது கர்ணபரம்பரையாக வழங்கும் கதை.

இந்தத் தேவார ஏடுகளை வெளிக்கொணரச் செய்த ராஜராஜ சோழன் எல்லாக் கோயில்களிலும் இவற்றைத் 'திருப்பதியம்' என்ற பெயரில் நித்தியமும் பாட வேண்டும் என்று சட்டம் பிறப்பித்திருந்தான். பல கோயில்களில் திருப்பதியம் பாடுவதற்கென்றே சில பாடகர்களை நியமித்திருந்தான். அந்தப் பரம்பரையில் இன்றும் தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றில் தேவாரம் பாடுவதற்கென்றே ஓதுவார்கள் இருப்பதைக் காணலாம்.

தில்லை நடராஜர் கூத்துகந்த பெருமான் என்ற காரணத்தால் கோயிற் சிற்ப வேலைகளிலெல்லாம் நடனக்கலையின் வடிவங்களைச் சேர்ந்திருக்கிறார்கள். கிழக்குக் கோபுர வாயிலிலும் நூற்றெட்டு வகைக் கரண பதங்களைப் புடைச் சிற்பங்களாக அமைத்து, அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தில் தனியரசு நடத்திய காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் ஒரு பரதக்கலை வல்லவன் என்பதையும் அவனே இந்தத் தாண்டவ லக்ஷண சிற்பங்களை ஏற்படுத்தியவன் என்பதையும் முன்பு நாம் சேந்தமங்கலத்தைப் பற்றிச் சொல்லும்போது குறிப்பிட்டிருக்கிறோம். இந்த நடன சிற்பங்களைப் பற்றிப் பல அறிஞர்கள் பல நூல்கள் எழுதியுள்ளனர்.

# நினைவுத்திறனை அதிகரிக்கும் மிளகு



பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம் - என்பது பழமொழி. மிளகு அந்த அளவிற்கு நஞ்சுமுறிப்பானாகச் செயல்படுகிறது. மிளகானது தங்கபஸ்மத்திற்கு இணையானது.

கால்சியம், இரும்பு, பொஸ்பரஸ் போன்ற தாது உப்புக்களும், கரோட்டின், தயாமின், ரிபோபிளவின், ரியாசின் போன்ற வைட்டமின்களும் மிளகில் காணப்படுகின்றன.

இவை அனைத்தும் நரம்புத் தளர்ச்சி, நரம்புக் கோளாறு முதலியவற்றை அகற்றி நரம்புகளுக்கு ஊக்கம் தருகிறது. நரம்பு மண்டலம் துடிப்பாக இருந்தால் சிந்தனையும் அதைத் தொடர்ந்து செய்து முடிக்கும் வேகமும் சீராகத் தொடரும்.

செயல்திறன் மிக்க வேதிப்பொருட்கள்: மிளகில் எளிதில் ஆவியாகும் எண்ணெய், ஆல்கலாய்டு, புரதம், கனிமங்கள் உள்ளன. பிபிரைன், பெருபிரைன், பிபிரோனால், கேம்பினி, அஸ்கோர்பிக் அமிலம், கரோட்டின் ஆகியவை பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

காரசாரமான மிளகு உமிழ்நீரை அதிகம் சுரக்க வைக்கிறது. ஜீரணக் கோளாறு உடனே குணமாகிறது. ஜீரண உறுப்புகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டுத் தொந்தரவில்லாமல் செயல்பட உதவுகிறது. உணவும் நன்கு செரிக்க ஆரம்பிக்கிறது. காய்ச்சலுடன் வயிற்று பொருமலையும் மிளகு தணிக்கிறது.

தும்மல் மற்றும் சளியுடன் ஜலதோஷம் என்றால் இருபது கிராம் மிளகுத்தூளை பாலில் கொதிக்க வைத்து ஒரு சிட்டிகை மஞ்சள் தூளும் கலந்து தினம் ஒரு வேளை வீதம் மூன்று நாட்கள் மட்டும் சாப்பிடவும்.

ஜலதோஷத்துடன் கூடிய காய்ச்சலுக்கு இதேபோல் ஆறு மிளகைத் தூள் செய்து தண்ணீருடன் சாப்பிடவும். இல்லையெனில் பாலில் மிளகுத்தூளைக் கொதிக்க வைத்து அருந்தலாம். சாதாரண ஜலதோசத்திற்கு காய்ச்சலுக்கும் நன்கு காய்ச்சிய பாலில் ஒரு சிட்டிகை மிளகுப் பொடியும், ஒரு சிட்டிகை மஞ்சள் பொடியும் கலந்து இரவில் ஒரு வேளை அருந்தி வர நல்ல பலன் தரும்.

சோம்பலாகவும், மந்தமாகவும் இருப்பவர் களும், ஞாபக மறதிக் குழந்தைகளும் மற்ற வயதுக்காரர்களும் ஒரு தேக்கரண்டித் தேனில் ஒரு சிட்டிகை மிளகுத்தூளைக் கலந்து காலையும் மாலையும் சாப்பிட்டு வரவும்.

மிளகில் உள்ள பாஸ்பரஸ் மூளையை விழிப்புடன் வைத்திருக்கும். ஆண்மைக் குறைபாடு உள்ளவர்களும், பெண்மைக் குறைபாடு உள்ளவர்களும் தினமும் நான்கு பாதாம் பருப்புகளுடன் ஆறு மிளகையும் தூளாக்கி பாலுடன் இரவில் அருந்தி வருவது நல்லது. குறைபாடுகள் குணமாகும். குழந்தையும் பிறக்கும்.

உடம்புவலி, பற்சொத்தை உள்ளவர்களும், மிளகை தினசரி உணவில் சேர்ப்பது நல்லது. அடிபட்ட வீக்கங்கள், கீல் வாதம் முதலியவை களுக்கு மிளகிலை, தழுதாழை இலை, நொச்சியிலை இவை ஒவ்வொன்றையும் சம அளவாக எடுத்து தண்ணீரில் இட்டு அடுப்பேற்றி நன்கு காய்ச்சி அந்த சூடான நீரில் நல்ல துணியை நனைத்து ஒத்தடமிட நல்ல பலன் கிடைக்கும்

பல்சொத்தை, பல்வலி, பேசும் போது நாற்றம், பல் கூச்சம் உள்ளவர்கள் சில நாட்களுக்கு மிளகுத் தூளும் உப்பும் கலந்த பற்பொடியை வீட்டில் தயாரித்துப் பல்துலக்கி வரவும்.

மிளகு எல்லாவித விஷங்களுக்கும் ஒரு சிறந்த முறிவாகப் பயன்படுகிறது. ஒரு கைப்பிடி அறுகம் புல்லையும், பத்து மிளகையும் இடித்து கசாயமிட்டு குடித்து வர சகல விஷக்கடிகளும் முறியும். மிளகுடன் வெற்றிலை சேர்த்து லேசாக இடித்து நீரில் கொதிக்க வைத்து வடித்த குடிநீரை குடித்துவர மருந்துகளால், உணவுப்பண்டங்களால் ஏற்பட்ட நச்சுத்தன்மை நீங்கும்.

சிலருக்கு தலையில் முடி உதிர்ந்து வழுக்கை போலாகி விடும். இதற்கு மிளகுத்தூள், வெங்காயம், உப்பு மூன்றையும் அரைத்து வெட்டு உள்ள இடத்தில் தேய்த்து வர முடி முளைக்கும்.

மிளகு இரசமும், மிளகு சேர்ந்த உணவு வகைகளும் ஆரோக்கியத்தைத் தருவதுடன் மூளையின் கூர்மையையும் அதிகரிக்கும்.



## நீயில்லாமல்...!

*-பாரதி பிரியா*



மணித்துளிகளின் மதிப்பு தெரியாமல்
மணி நேரங்கள் பேசிய நாட்கள்...
நிமிடங்களை கூட கடக்கமுடியாமல்
தவிக்கிறேன் ... இன்று!

தொட்டுச் செல்லும் தென்றல் கூட..
தேகம் வேகச்செய்கிறது...!
முடியாத இரவுகள்... நித்திரையின்றி
சித்திரையாய் வதைக்கிறது!

நிலவு தேய்வதும் வளர்வதும்போலே
நின் நினைவுகளால் நானும்...!
சில்லறையாய் சிதறிப்போன கனவுகள்
நீயில்லாமல் கனவுகளாகவே!

நீ நடந்த பாதையெங்கும் என்
விழிகளின் தேடல் ....
நீ தந்த நினைவுகளெல்லாம் என்
உயிரின் தேடல்...

தேடல்கள் நீண்டு கொண்டே போகலாம்..
உயிரின் தூரம் குறைந்தும் போகலாம்..
உயிர் சுமக்கும் இந்த தேகம்..
உன் நினைவாலே.. உலகம் உள்ள வரை!

# தை முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டு



ஐவர்வழி வ.வேம்பையன்

நம் வாழ்வில் திரும்பப் பெற முடியாதவை மூன்று. ஒன்று காலம் மற்றவை மானமும், உயிரும்! குமுகாயம், ஊர், நகர், நாடு, உலகம் பற்றிய நிகழ்ச்சிகளைக் கணக்கிடுவதற்குக் கால அளவை இன்றியமையாத ஒன்றாகிறது.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்

என்ற குறள் மூலமும் காலம் அறிதல் என்ற அதிகாரத்தின் வழியும் காலத்தின் அருமையைத் திருவள்ளுவர் உணர்த்துகிறார்.

நம் முன்னோர்கள் காலத்தை நொடி, நாழிகை, நாள், கிழமை, மாதம், ஆண்டு, ஊழி என்று வானியல் முறைப்படி வரையறை செய்துள்ளனர். 60 நாழி கையை ஒரு நாளாகவும், ஒரு நாளை வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்று ஆறு சிறுபொழுதுகளாகவும் ஓர் ஆண்டை இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்று ஆறு பெரும் பொழுதுகளாகவும் பிரித்துள்ளார்கள்.

காலத்தைக் கணக்கிடுவதில் இத்துணைக் கவனம் செலுத்திய தமிழர்கள் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைத் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவற்றுக்குப் பொதுவான தொடர் ஆண்டுக் கணக்கால் குறிப்பிடும் வழக்கத்தைப் பின்பற்ற வில்லை என்பது வியப்பாக இருக்கிறது; வருத்தம் அளிக்கிறது.

தலைநகரின் தோற்றம், பேரரசன் பிறப்பு, அரசர்கள் முடி சூட்டிக் கொண்ட ஆண்டுத் தொடக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த அரசர் பெயரோடு தொடர் ஆண்டு கடைப்பிடித்து வந்தனர் என்று சங்க இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள் மூலம் தெரிகின்றன.

நாட்டுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் பொதுவான தொடர் ஆண்டால் காலத்தைக் கணக்கிடல் வேண்டும் என்ற கருத்து அரசர்களிடம் இல்லை என்று தோன்றுகிறது. தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் அதன் இன்றியமை யாமையை அரசர்களுக்கும் பொது மக்களுக்கும் எடுத்துக் கூறியதாகவும் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையையும் தமிழர்களிடம் மண்டிக்கிடந்த கடவுள், மதம், சாதி, மூடநம்பிக்கைச் செல்வாக்கையும் அரசர்களிடம் பெற்றுள்ள நெருக்கத்தையும் பயன்படுத்திப் பிரபவ முதல் அட்சய வரை உள்ள 60 ஆண்டுமுறையைப் புகுத்திவிட்டது ஆரியம்.

'ஆபாச 60 ஆண்டுப் பெயர்களும் சித்திரைப் புத்தாண்டும் சாலிவாகனன் என்பவனால் அல்லது கனிஷ்கனால் கி.பி.78இல் எற்பட்டவை. இவை வடநாட்டு அரசனால் ஏற்பட்டவையாதலின் வட மொழிப் பெயர்களாய் உள்ளன.' (ஆதாரம்:-பக்கம் 7 தி ஹிந்து 10.03.1940)

அறுபது ஆண்டுகளின் பெயர்களில் ஒன்றுகூடத் தமிழ் இல்லை. 60 ஆண்டுகள் பற்சக்கர முறையில் இருப்பதால் 60 ஆண்டுகளுக்கு மேல் உள்ள காலத்தைக் கணக்கிடுவதற்கு உதவியாகவும் இல்லை. 60 ஆண்டுகளின் பெயர்கள், கிருஷ்ணனும் நாரதரும் கலவி செய்து பெற்ற பிள்ளைகள் என்ற கதையை மானமும் அறிவும் உள்ள மக்களால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

எனவே, ஐந்நூறுக்கு மேற்பட்ட தமிழ் அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் 1921ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க்கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடிய மாநாட்டில் ஆராய்ந்தார்கள். பேராசிரியர் கா. நமச்சிவாயர் மாநாட்டைத் தொடக்கி வைத்தார்.

திருவள்ளுவர் இயேசு கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர்; அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது, அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது; தை மாதம் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என முடிவு செய்தார்கள்.

முடிவு செய்தவர்களில் தலையான தமிழ் அறிஞர்கள், தமிழ்க்கடல் மறைமலை அடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனார், தமிழ்க்காவலர் கா. சுப்பிரமணியபிள்ளை, சைவப் பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை, நாவலர் நா.மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், பேராசிரியர் சா. நமச்சிவாயனார் ஆகியோர் ஆவார்கள்.

இந்த முடிவுகள் எந்த அடிப்படையில் எடுக்கப் பட்டன என்று முத்தமிழ்க் காவலர் அவர்களை வினவினேன். 'மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அறிஞர்களின் அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவையே அடிப்படை என்று குறிப்பிடுங்கள்; போதும்' என்று விளக்கம் தந்தார்.

திருக்குறாளர், தமிழ் மறைக் காவலர் வீ. முனிசாமி அவர்களிடம் இந்த நான்கு முடிவுகள் பற்றிக் கேட்டேன். 'தமிழக்கடல் மறைமலை அடிகள் சொல்வதே ஆதாரம்' என்று கூறினார்.

பழந்தமிழகத்தில் ஆண்டுத் தொடக்கம் தை மாதமாக இருந்தது; பின்னர் தொல்காப்பியர் காலத்தில் ஆவணியில் தொடங்கி ஆடியில் முடியும் ஆண்டு நாள்காட்டி வழக்கில் இருந்தது. ஆரிய ஆதிக்கத்தில் சித்திரை 60 ஆண்டின் முதல் மாதமாக மாற்றப்பட்டது. நாம் புதிதாக எதையும் புகுத்த வில்லை. இழந்த தொன்மைச் சிறப்புக்குரிய தை மாதம் முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் என்பதை மீட்டு எடுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

'வானநூல் பொருத்தமும் வயல் விளைச்சல் பொருத்தமும் ஒருங்கே அமையப்பெற்ற தை மாதம் முதல் நாளைத் தமிழர்தம் ஆண்டுத் தொடக்கமாகப் பெற்றிருந்தனர் எனின் அவர்தம் அறிவினை என்னெனக் கூறி வியப்போம்' என்பது நாவலர் சோமசுந்தர பாரதியாரின் நற்சான்றாகும்.

முன்னாளில் தமிழ் ஆண்டு தை முதல் மாதத்தில்தான் இருந்தது என்பது கம்பன் அடிப்பொடி சா. கணேசன் கருத்தாகும்.

'சிந்துவெளி மக்கள் தம் ஆண்டுத் தொடக்கம் தை மாதம் முதல்நாள் என்று வழங்கினர். பிற்காலத்தில் இதுவே திருவள்ளுவர் ஆண்டுப் பிறப்பும் ஆயிற்று' என்கிறார் விஞ்ஞானி நெல்லை சு. முத்து அவர்கள்.

தையே முதற்றிங்கள்; தைம் முதலே ஆண்டு முதல்
பத்தன்று; நூறன்று; பன்னூ றன்று
பல்லாயி ரத்தாண்டாய்த் தமிழர் வாழ்வில்
புத்தாண்டு தைம்முதல்நாள், பொங்கள் நன்னாள்
நித்திரையில் இருக்கும் தமிழா !
சித்திரை அல்ல உனக்குத் தமிழ்ப்புத்தாண்டு
அண்டிப் பிழைக்க வந்த ஆரியக் கூட்டம் காட்டியதே
அறிவுக்கு ஒவ்வாத அறுபது ஆண்டுகள்
தரணி ஆண்ட தமிழர்க்கு
தை முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டு

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடலும் தமிழருக்குத் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் தை மாதம் முதல் நாள் என்பதைத் தெளிவுபடுத்து கின்றன.

'முன்காலத்தில் வருடப் பிறப்பு, சித்திரை முதல் நாளாக இருந்த தில்லை; தை முதல் நாள் தான் வருடப்பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டா டினார்கள்' - மூதறிஞர் மு. வரதராசனார்

'தைப் பொங்கல் திருநாள் தமிழர்களாகிய நமக்குப் புத்தாண்டுத் தொடக்க நாளாகும்' - அறிஞர் நாரண துரைக்கண்ணன்

'தை முதல்நாள் தைப்புத்தாண்டின் தொடக்க நாள் என்பது தெள்ளிதின் புலனாகும். அறிவியல் அடிப்படையில் இது ஏற்கத்தக்கதுமாகும்' - டாக்டர் மெ. சுந்தரம்

தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்பதை 1935ஆம் ஆண்டில் திருச்சியில் மறைமலை அடிகள் தலைமையில் நடந்த தமிழர் மாநாட்டில் தந்தை பெரியார் ஏற்றுக்கொண்டார்.

'தை முதல் தமிழினத்தின் ஆண்டு முதல் நாள்' - பேராசிரியர் செல்வி பாகீரதி

பொங்கல்விழா நாளையே தமிழர்கள் புத்தாண்டுத் தொடக்கமாகக் கொண்டாடி வந்துள்ளனர் என்பதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கழக இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.

| | |
|---|---|
| தைஇத் திங்கள் தண்கயம் படியும் | - நற்றிணை |
| தைஇத் திங்கள் தண்ணிய தரினும் | - குறுந்தொகை |
| தைஇத் திங்கள் தண்கயம் போல் | - புறநானூறு |
| தைஇத் திங்கள் தண்கயம் போல் | - ஐங்குறுநூறு |
| தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ | -கலித்தொகை |


'தை முதல் நாள் தமிழர் திருநாள் மட்டுமல்ல. தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாளும் இதுவே. தமிழ் ஆண்டாகிய திருவள்ளுவர் ஆண்டை நாம் கடைப்பிடிக்க முன்வர வேண்டும்' - தலைவர் கலைஞர் மு. கருணாநிதி

சித்திரை முதல்நாள் தமிழ்ப்புத்தாண்டின் தொடக்கம் என்பதை ஏற்பதற்கு எந்தச் சான்றும் இதுவரை எவரும் தரவில்லை. புராணிகச் சார்பை வைத்துக் கொண்டு ஒரு புத்தாண்டைக் கைக் கொள்வது தமிழர்களுக்கு இழுக்குத் தருவதாகும்.

'தை முதல் நாளில் தொடக்கமாகும் திருவள்ளுவர் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு எனக் கொண்டாடுவது தான் முறை' - முனைவர் மு. தமிழ்க் குடிமகன்


'ஆண்டுப் பிறப்பு (வருடப் பிறப்பு) என்பதன் பொருளே அது நாரதர் குழந்தை என்ற கதை மரபால்தான். மற்றபடி ஆண்டுத் தொடக்கம் என்பதுதான் தமிழர் மரபு' - பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், மலேசியத் தமிழ் நெறிக் கழகம், மலேசியத் திராவிடர் கழகம் மூன்றும் இணைந்து மலேசியாவில் இயங்கும் மேலும் 15 தோழமை இயக்கங்கள் மற்றும் உலகளாவிய இயக்கங்களின் ஒத்துழைப்புடன்



# அருள்மிகு ஸ்ரீ சிவன் கோயில்

**லண்டனில் உள்ள கோயில் விளம்பரம் "அருள்மிகு ஸ்ரீ சிவன் கோயில்" என்று எழுதியிருந்தது. இது தவறானதாகும்.**



**இதற்கு ஔவை நடராசன் தந்த விளக்கம்**

**அருள்மிகு என்றால் ஸ்ரீ தேவையில்லை**

**ஸ்ரீ போட்டால் அருள்மிகு தேவையில்லை**

*06.01.2001*ஆம் நாள் மலேசியா, கோலாலம்பூரில் நடத்திய உலகப் பரந்துரை மாநாட்டில் (World Declaration Conference) தை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் என இன்று முதல் *(06.01.2001)* உலகப் பரந்துரை *(World Declaration)* செய்கின்றோம் என்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்த மாநாட்டில் திருக்குறள் மணி இறைக்குருவனாரும் (தென் மொழி ஆசிரியர்), நானும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினோம்.

தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பதற்குத் தமிழ் நாடு அரசு ஆட்சி அங்கீகாரம் அளித்தல் வேண்டும் என்பது தமிழ் அமைப்புகள், தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள், தமிழ்மொழி, இன உணர்வாளர்கள் ஆகியோர்களின் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான கோரிக்கையாகும்.

திராவிடர் கழக மாநாடுகளிலும் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களிலும் மற்ற கழக நிகழ்ச்சிகளிலும் தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள் என்பதைத் தமிழக அரசு ஏற்று ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விடாமுயற்சி வெற்றி தரும்; கூட்டு முயற்சி ஈட்டும் வளர்ச்சி என்பதற்கு ஏற்பத் தலைவர் கலைஞர் அவர்கள் அனைவரின் கோரிக்கைக்கு மதிப்பளித்து ஏற்று 2008இல் தை முதல் நாள் தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் என்று சட்டம் இயற்றி நடைமுறைப் படுத்தினார்.

2011 மே மாதம்ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அ.தி.மு.க. அரசின் முதலமைச்சாராக 16.05.2011இல் செல்வி ஜெயலலிதா பதவி ஏற்றார். அன்றே முதல் வேலையாக விடுதலை நாளிதழை நூலகங்களிலிருந்து அகற்றி ஆணையிட்டார்.

தலைவர் கலைஞர் அவர்களின் மீதுள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தமிழ்ப் புத்தாண்டு தை முதல்நாள் என்ற சட்டத்தை ரத்து செய்து, சித்திரையே தமிழ்ப்புத்தாண்டு என்று சட்டம் இயற்றினார்.

இவை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா கொள்கைக்கு எதிரானவை. தமிழ்மொழி, இன உணர்வாளர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள், பகுத்தறிவாளர்கள் முதலியவர்களின் வெறுப்புணர்வும் பகையுணர்வும் முதல்வர் மீது ஏற்பட்டுள்ளன.

திராவிட என்பதையும், அண்ணா என்பதையும் கட்சிப் பெயரில் வைத்துக் கொண்டும், அண்ணா உருவம் தாங்கிய கொடியைத் தங்கள் கொடியாக ஏற்றுக்கொண்டும் தமிழ்ப் பண்பாட்டுக்கு எதிராகச் செயலாற்றுவது பகையுணர்வை வளர்க்கவே பயன்படும்.


**ஈரடியில் பொய்யா மொழி**
**ஈரோட்டு அய்யா மொழி**
**அறிஞர் அண்ணாவின் அறிவுவழி**
**அனைத்துமே தமிழர் உய்யும் வழி**

என்பதை உணர்ந்து தெளிந்த தமிழர்கள் தை முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டு என்பதை ஏற்றுக் கொண்டாடுவார்கள்; பார் முழுதும் பரப்புவார்கள்.

# தன்னைக் காட்டும் நடிகர் - தன்னிலை உணராத ரசிகன்!

இரா. உமா


அன்னா அசாரேவின் ஊழலுக்கு எதிரான போராட்டத்திற்கு அதாவது இரண்டாவது சுதந்திரப் போருக்கு, 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் தன்னுடை முழு ஆதரவினைத் தெரிவித்திருக்கிறார். இப்போது, ஊழலுக்கு எதிரான இந்தியா அமைப்பின் சென்னைக் கிளை சார்பில், டிசம்பர் 27முதல் மூன்று நாள்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இந்த உண்ணாவிரதத்திற்குத் தன்னுடைய ராகவேந்திரா திருமண மண்டபத்தை இலவசமாக வழங்கியிருக்கிறார் ரஜினி. நிகழ்ச்சி ஏற்பாடுகளையும் நேரில் சென்று பார்வையிட் டிருக்கிறார். ஆகஸ்ட் மாதம் 2ஆவது உண்ணா விரதத்திற்குப் பாராட்டுக் கடிதம் அனுப்பியவர், சென்னை வந்த அசாரேவிடம், தொலைபேசியில் பேசி, ஊழலுக்கு எதிரான தன்னுடைய ஆதரவினை நங்கூரம் போட்டு நச்சென நிலைநாட்டியிருக்கிறார்.




ஜனவரி மாதம் ரஜினிக்கு உடல் நலமில்லை என்று செய்தி வந்தபோது, அவரது ரசிகர்கள் - தமிழ்நாட்டு இளைஞர்கள், ஏதோ தங்களுடைய எதிர்காலமே இருண்டுவிட்டது போன்று சோகத்தில் ஆழ்ந்தனர். ஏறத்தாழ 6 மாதங்கள் சிகிச்சை முடிந்து, சிங்கப்பூரில் இருந்து தங்கள் தங்கத் தலைவர் சென்னை திரும்பியது வரை, எவ்வளவு வேண்டுதல் கள், எத்தனை மொட்டைகள், தீ மிதிகள், காவடிகள், அலகு குத்தல்கள்...அடேயப்பா ! ரஜினியும் சளைத் தவரா என்ன, 'என் உடல் பொருள் ஆவி தமிழுக்கும் தமிழர்க்கும் கொடுப்பது முறை யல்லவா' என்றெல்லாம் பாடி ஆடினாரே !

இன்று அன்னா அசாரேவுக்கு வலியப்போய் ஆதரவுக் கரம் நீட்டும் ரஜினி, பரமக்குடியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டபோது 'படுக்கையில் பேச்சு மூச்சற்று'க் கிடந்தாரா? முல்லைப் பெரியாறு பிரச்சினையில் அப்பாவித்

தமிழர்கள் அடிபட்டு, இரவோடு இரவாக அகதிகளாக வந்தபோது வாயைத் திறக்கவில்லையே சூப்பர் ஸ்டார். கூடன்குளம் போராட்டம் 3 மாதங்களைத் தாண்டி நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைகளில் எல்லாம், 'கோமா நிலை'யில் இருப்பது போல் இருந்த ரஜினி, அன்னா அசாரேவுக்கு வலியப் போய் ஆதரவு தருகிறார். இதை உணர முடியாத அளவுக்கு, ரசிகர்களின் அறிவைத் திரைப்பட மோகம் மறைக்கிறது. இதுபோன்ற தவறான முடிவுகள், அவரோடு நின்று போய்விடாது. அவரைக் கண்மூடித்தனமாகக் கொண்டாடும், இலட்சக்கணக்கான இளைஞர்களும் இதே வழியில், தவறானவர்கள் பின்னால் அணிவகுக்கும் ஆபத்து இருக்கிறது.



கருப்புப் பணம் அதிகமாகக் குவிந்து கிடப்பது திரைப்படத் துறையில்தான். அதனால்தான் அவர்களால் அதைப் பற்றி விலாவாரியாகப் படம் எடுக்க முடிகிறது. கூட்டத்தோடு கூட்டமாக ஓடித் தப்பித்துக் கொள்ளும் தந்திரம்தான், இவர் போன்றவர்களின் ஊழலுக்கு எதிரான ஆதரவு. ஏற்கனவே ஒருவர் விமானத்தில் பறந்து சென்று அன்னாவின் மேடையில் முழங்கி, தன்னுடைய தூய்மையை நிலைநாட்டினார். ரஜினிக்கு வயதாகி விட்டதாலும், நோயாளியாகி விட்ட காரணத்தாலும், இஸ்மெயிலிலும், தொலைபேசியிலும் ஊடகக் காந்திக்கு ஆதரவினைத் தந்திருக்கிறார் போலும். இதே இஸ்மெயிலில், தமிழ்நாட்டுப் பிரச்சினைக்காக பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பினாலும் போய்ச்சேரும் என்றுதான் ... நம்முடைய அறிவுக்கு எட்டுகிறது. 'நல்லவன்' ரஜினி ரசிகனின் அறிவு நிலை எப்படியோ?





சொல்வதெல்லாம்...

இரா. உமா,

இலக்கியா பதிப்பகம்
169, வி.வி. கிரி தெரு,
இராமகிருஷ்ணா நகர்,
ஆழ்வார்த்திருநகர், சென்னை - 87
விலை: ரூ.70/-,
தொலைபேசி:9444582089

இந்நூல் பெற விரும்புவோர் தமிழர் தகவல் முகவரிக்குத் தொடர்புக்கொள்ளவும்.

# பொங்கலோ பொங்கல்..!



எத்தனையோ பண்டிகைகளை இந்திய தேசத்தில் பல்வேறு கலாச்சாரங்களின் வெளிப்பாடாய் கொண்டாடி வந்தாலும் தமிழ்த் தேசத்தில் கொண்டாடப்படும் பொங்கல் விழா என்னும் தமிழர் திருநாள் விழா மற்ற எல்லா விழாக்களையும் விட வித்தியாசமானதுதான்.

மதத்தின் வெளிப்பாடாய், சாதியின் வெளிப்பாடாய், பல்வேறு கடவுளர்களையும், பலதரப்பட்ட மகிழ்ச்சிகளையும் வெளிப்படுத்தும் விதமாகத்தான் மனிதர்களின் பண்டிகைகள் வடிவமைக்கப்ப்பட்டது, ஆனால் பொங்கல் பண்டிகை என்பது ஒட்டு மொத்த தமிழர்களின் கலாச்சார விழாவாக, தொன்மையை விளக்கும் ஒரு ஆத்மார்த்த நிகழ்வாக பாகுபாடுகளை எல்லாம் களைந்தெறிந்து ஒரு இனத்தின் விழாவாய் எப்போதும் மிளிர்கிறது.

விவசாயத்தை சார்ந்த ஒரு இயற்கை வாழ்வினை வாழ்ந்து அதை சிறப்பித்து நன்றி கூறும் ஒரு ஒப்பற்ற நிகழ்வாய் தமிழர்களுக்கு பொங்கல் அமைந்ததோடு மட்டுமில்லாமல் அவனது கலை, வீரம், பண்பாடு எல்லாவற்றையும் ஒன்று சேர உலகத்திற்கே எடுத்தியம்பும் ஒரு அற்புதமான மனித அளாவல் இது. மனிதர்கள் மனிதர்களை நேசிப்பதும், தெய்வங்கள் என்று தத்தம் மதங்கள் போதித்தவற்றை போற்றி புகழ்ந்து கொண்டாடுவதும்தான் உலகத்தின் வழமையான கொண்டாடல்.


மண்ணோடு மண்ணாக மனிதன் உறவாடி உழவு செய்து மானுடர்க்கு எல்லாம் உணவு கொடுக்கும் உலகின் ஆதி தொழிலான விவசாயத்தை செய்வதற்கு அவன் சார்ந்திருந்த எல்லா அசையும் அசையா பொருட்களுமேதான் உதவி செய்தன என்ற மிகப்பெரிய நன்நோக்கில் அதை ஒரு நன்று நவிழலாக, உழைத்து, உழைத்து அந்த உழைப்பில் தான் விளைவித்த தானியங்களை எல்லாம் அறுவடை செய்து, அந்த மகிழ்ச்சியை தன் சமூகத்தாரோடு கலந்து கொண்டாட தீர்மானித்த போது....

மனிதர்களைக் கடந்து எப்போதும் ஒளி தந்து தாம் விளைவித்த பயிர் பச்சைகளுக்கு உயிர் கொடுத்து காத்தருளிய அந்த ஆதவனை உயிராய் பாவித்து நன்றி செய்யவும், தனக்கு விவசாயத்தின் போது உதவிய மாடு, ஆடுகளை நெஞ்சார நேசித்து காலமெல்லாம் அவை செய்த விசுவாசத்துக்கு நன்றி சொல்லவும்.

தமிழர்களின் கலாச்சார விழாவான பொங்கல் திருவிழா வெறும் (உறவுகள் கூடிக் களிக்கும் ஒரு விழா மட்டுமல்ல அது உணர்வுகளின் சங்கமம். மண்ணை எடுத்து அந்த மண்ணில் பாண்டம் செய்து அந்த பாண்டத்தில் பொங்கல் செய்து அவன் மகிழ்ந்த போது இயற்கையின் முழுச்சுற்றையும் தன் விழாவிற்காக அவன் பயன் படுத்தி முடித்திருந்தான். பஞ்ச பூதங்களும், இயற்கையும், மனிதரும் கால்நடைகளும், சேர்ந்து கொண்டாடும் ஒரு பண்டிகையாய் அகில உலகத்திலேயே தமிழர்களின் பொங்கல் விழா மட்டுமே இருக்க முடியும்.

சிறப்புகளை கைக் கொண்டு விழாவை விழாவாய் நகர்த்தி இதன் மூலம் நமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் உலகோர் அறியத்தான் நாம் செய்யவேண்டும்.

வரப்போகும் காலங்களில் விவசாயம் இன்னமும் செழித்தோங்கி வளர அரசு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும்....மிகுதியான இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு... நம் தமிழ்த் தேசம் செழிக்க வேண்டும்...!


MITHUS
Jewellers
322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792


Ilford பகுதியில் தமிழர் மளிகை கடை
SRI FOOD
&
WINE
396-400 Ilford Lane
Town Centre
Ilford, IG1 2NB
Tel : 020 8553 7737


Hotel Westeern
Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place - Bambalapitiya,
Colombo 4, Sri Lanka
Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com
Approved by the Ceylon Tourist Board
EELAM SHOP
399 Lewisham High Street Lewisham
London SE13 6NZ
TeL : 020 8690 6545

# நாங்களும் இருக்கிறோம்

லூசியத்தில்

**VINISHA**

SRILANKAN SOUTH INDIAN REATAURENT

2 Loampit Hill, Lewisham, London SE 13 7SW

Tel : 208 6917944 Mob : 07812246956



**Thinesh**

**Jewellers & Textiles**

276, Lewisham High Street

Lewisham, London SE 13, 6JZ

Tel : 020 8613 9569

www.thinesh-jt.com

**RAAJ BROTHERS BUILDERS**

E-mail

pakiyarajah@hotmail.co.uk

Tp:- 07903907245

07984977163

07545377114

*Specialising in Decorations*

*Roof & Loft Conversions*

*Extensions & Plastering*

*Laminate Flooring*

*& Repair Works*



**DOSA**

LOUNGE

Opening Times

Monday - Sunday

11 am - 11 pm

Free Delivery

(6pm to 10pm)

within 3 miles radius

Minimum order of £20.00

5-7 St James's Road, West Croydon, CR0 2SB

Tel : 020 8684 6661 www.dosalounge.co.uk

உங்கள் சகல தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

**YAAAL SUPERMARKET**

**COSTCUTTER**

425 Bromley Road, Downham 4R1 4TJ

Tel : 0208 461 5809

**Accident Courtesy**

*Call us now*

142, Pinner Road, Harrow HA1 4JE

Tel: 08002321523 / 020 8 427 4060

Fax: 0845 8710197

E-mail: info@accidentcourtesyltd.co.uk

லூசியத்தில் ஒரு தமிழ் கடை

**BEST FOOD**

30 Loampit Hill, Lewisham, London SE 13 7SW

Tel : 0208 692 9811

*specialist in : Srilankan, Indian & English Groceries Off Licence, Frozen Foods, Fresh Vegatables*

இலங்கை இந்தியா பணம் மாற்று சேவை நடைபெறும்

**CHANDRA**

Super Market & Off Licence

**COST CUTTER**

**Tel : 020 8333 8680**

209 - 211 Bromley Road Catford, London SE6 2PG

**Anthoorium**

*World of Designs*

Jewellery & Textiles

102, B Burlington Road New Malden,

Surrey KT3 4NT

Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007

Web : www.anthoorium.co.uk Email : sales@anthoorium.co.uk



Harrow-ல் முதல் தமிழ்க்கடை

**FOOD VILLE LTD**

**(Shankar & Co)**

231-233 Northolt Harrow HA2 8HN

Tel : 0208 4236429

# Best Foods

11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100

364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323

259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677



எங்கள் வியாபார
நிலையத்தில்
ஒவ்வொருமாதமும்
அதிரடி மலிவு
விற்பனையாக
பல பொருட்களை
மக்களுக்கு விற்பனை
செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும்
எங்கள் கிளைகளுக்குச்
சென்று மலிவு விலை
பொருட்களை
பெற்றுக்கொண்டு
கணிசமான பணத்தை
சேமியுங்கள்

25.12.2011 தொடக்கம்
25.01.2012 வரை
கிருஸ்துமஸ், பொங்கல்

**Wembley, West Croydon**
கடைகளில் மட்டும்
**5%** தள்ளுபடி

அரிசி, மீன் மற்றும் மளிகைப்பொருட்களுக்கு

**தமிழர் தகவலின் இந்த விளம்பரத்தைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்**


ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணி நேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி
DEEPAM TV
உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி
தீபம்
• செய்திகள் • காலைக்கதிர் • சின்னத்திரைத் தொடர்கள் • அரசியல் ஆய்வு நிவரணங்கள் • மகளிர், சிறுவர் நிகழ்ச்சிகள் • நீங்களும் நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள் • இசை, நடன நிகழ்ச்சிகள் • புத்தம் புதிய திரைப்படங்கள்
10 ஆண்டுகளுக்கு மேல் புலம்பெயர் மக்களின்
முதன்மைத் தொலைக்காட்சி
DEEPAM
உலகத் தமிழர்களுக்கு ஒரு தொலைக்காட்சி
www.deepamtv.tv
Tel: 0044 (0)208 814 6565
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTER
161, 163 STAINES ROAD, HOUNSLOW, MIDDLESEX, TW3 GJB, UK
Tel : 44(0)208 814 6565 Fax : +44(0)208 814 1144
Email : info@deepamtv.tv Web : www.deepamtv.tv



AMBAAL
Jewellers
176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097




SKY WINGS LTD
"Where The Sun Never Sets"
Cheapest Worldwide Fares with the Best Service
Main Agent for:
Srilankan Airlines
Qatar Airways
Kuwait Airways
Oman Airways
and many more...
Special Packages To
Sri Lanka, Maldives, China
Malaysia, And many more
Destinations...
Reservations please call:
Tel:0208 672 9111
Function Hall
Weddings
and Parties
Head office: 119, Tooting High Street, London, SW17 0SY.
Emergency Number: 078 50 876921
Deals Of The Week
web: www.skywings.co.uk
email: bala@skywings.co.uk
Colombo £240+Taxes
Maldives £294+Taxes
China £360+Taxes
India £130+Taxes
Branches:
Harrow
G7A, Talbot House 204-226 Imperial Drive
Rayners Lane, Harrow,
Middx HA2 7HH
020 8872 4144
We accept all credit cards.
Eastham
317 High Street North
Manor Park, London E12 6SL
020 8471 8366




SELECT
ESTATE LETTINGS
Sales Mortgages Lettings
Residential & Commercial Sales Professional Service
Rent Guarantee Scheme Vetted Tenants
In-house Maintenance Dept
Competetive Sales Commission Business Transfer
Mortgages Arranged even with no proof of income
Select the Best
288 High Street North,
Manor Park, London E12 6SA
Tel : 020 8470 1500
Fax : 020 8470 9800
www.selhouses.co.uk
email : info@selhouses.co.uk




லூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை
கற்பகம்
தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்
KATPAGAM
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 694 88 10
உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்


புதுப்பொலிவுடன் Croydon- ல்
Jk Gold House &
Fashion House
ஆடை ஆபரணம் வாங்க ஆசை பூர்த்தியாக நீங்கள்
என்றும் நாட வேண்டிய ஒரே இடம்
சுப நிகழ்ச்சிகள்
நடத்தக்கூடிய
மண்டபம்
வாடகைக்கு உண்டு
314 - 316 London Road
Croydon
Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677


SUN MOTORS
BEHIND 26, Loampit Hill,
Lewisham, London SE 13 7SW
Tel : 020 86920232
Mob : 07846189263
For all types of Cars, Mechanical Repairs
Clutches & Exhausts Full Service
Body work and Respray
Tyres Recovery Service
Mot Arrangement
Used BMW Spares from the shelf


எவரஸ்ட்
Curry King
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner


சிங்கம் தமிழ்க் கடை
Red Line Wine
184 Hither Green Lane
Lewisham
London SW13 6QA
Tel : 020 8297 8778
இலங்கை. இந்தியாவிலிருந்து
இறக்குமதியாகும் உடன் மரக்கறி
மீன் வகைகள், பழ வகைகள்
மற்றும் அனைத்து மளிகைப்
பொருட்களையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளநாட வேண்டிய இடம்
- சிங்கம் தமிழ்க் கடை
இது ஒரு புதிய உதயம்.
[வாகனத்
தரிப்பிட
வசதியும்
உண்டு]



இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# PATHMINI

22ct GOLD

JEWELLERS

892 London Road
Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


THE INTERNATIONAL ASSOCIATION OF LIONS CLUBS
DISTRICT 306 B1 - SRI LANKA

# SURUVIL



## ஊர்காவற்துறை சுருவில் மைந்தனுக்கு அவுஸ்ரேலியாவில் சிறப்பு




லயன் ஜெயவத்சலனுக்கு சர்வதேச லயன்ஸ் க்ளப் தலைவர் மரியாதை செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது


88 years of
silk heritage
RmKV
Wedding Silks
Bridal Seven
உங்கள் திருமணத்தின்
நிச்சயதார்த்தம் முதல் கிரஹப்பிரவேசம்
வரையிலான ஏழு
சுபமுகூர்த்தங்களையும்
கொண்டாடுங்கள், ஆரெம்கேவியின்
பிரைடல் செவனோடு! உங்களுக்காகவே
ஆரெம்கேவியின் கைதேர்ந்த
நெசவாளர்களால் உருவாக்கப்பட்ட
அற்புதப் படைப்புகள் என்றென்றும்
உங்கள் திருமணத்தை மகிழ்வோடு
மனதில் நினைக்கச் செய்யும்.
சென்னை | பனகல்பார்க்
கோயம்புத்தூர் | ப்ரூக்ஃபீல்ட்ஸ்
திருநெல்வேலி | வண்ணார்பேட்டை
toll free no 1800 425 3105
(applicable within India only
from 10am to 9pm)
for more details
sms Bridal7 to 53636
email silks@rmkv.com
facebook
www.facebook.com/RmkvSilks
purchase online at
www.rmkv.com


EXTRA FREE CREDIT
£5.00 = £6.00
£10.00 = £12.00
£20.00 = £25.00
with online top-up
Lycamobile
Call the world for less
India
Landline + Mobile
1/2p /min
Happy Diwali
FREE minutes & texts from Lycamobile PLUS to Lycamobile PLUS
Top-up £30 2000
Top-up £20 500
Top-up £10 250
Top-up £5 100
UK Landline 3p/min Mobile 10p/min
For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322
Lyca mobile
Call the world for less


talk
Lyca
RECHARGEABLE
International calling card
INDIA
+ MOBILE
1 p/min
MALAYSIA
LANDLINE
1 p/min
SRI LANKA
+ MOBILE
5 p/min
SINGAPORE
+ MOBILE
1/2 p/min
EUROPE
LANDLINE FROM
1/2 p/min
USA & CANADA
+ MOBILE
1/2 p/min
GUARANTEED MINUTES
100%
NO
Connection Charges
Maintenance Charges
Hidden Charges
Expiry Date
Contract
CONFERENCE CALL
CALL NOW ON :
0800 652 7566 / 0207 132 9999
payzone
Or visit www.lycatalk.com
Rates correct at the time of printing on 26/01/2011. For all Terms and Conditions visit www.lycatalk.com Customer Services 0207 132 9999 or 0800 652 7566 The Lycatalk international rechargeable calling card service is provided by Lycatel Services Ltd, and products are distributed by Lycatel Distribution UK Ltd. Call rates shown above are based on calls placed using the Lycatalk 0207 access numbers from the UK to landline and mobile telephones in the destinations above. For full rates to all destinations and mobile telephone numbers, please visit www.Lycatalk.com or contact our customer services team on 020 7132 9999 or 0800 652 7566. Before connecting your call, a voice prompt will inform you of the rate you are paying per minute from your Lycatalk account. Calls using this service are rounded up in one minute intervals. Calls using our 0800 access numbers incur a surcharge of 1p per minute charge. Payphone providers pass on significant costs and incur a 15p per minute surcharge and are not recommended for this service. You should contact your telecoms provider quoting the Lycatalk access number you wish to use for the service to ensure you are aware of their charges, if any. Calls to 0845 or 0871 access numbers are typically considerably higher than calls placed to 0207 access numbers. Mobile telephones can cost considerably more if you use Lycatalk access numbers outside of your mobile provider's inclusive minutes allowance.